**கவனிக்க** .- *2014.11.21 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1891 - 2014 නොවැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2014.11.28

*1891 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1826* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1835* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, மார்கழி மாதம் 29 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, கார்த்திகை 11.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | திககொட | திககொட பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கங்கபடபற்று பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை |

11-870

## நீதிச்சேவை ஆணைக்குழு

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் "காதி" பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் :

விண்ணப்பதாரர் முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமனான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப் பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்க வேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவர்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்ட ரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு 6,000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, விண்ணப்பப்படிவங்கள் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''காதி'' எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

டபிள்யு. கே. டீ. விஜேரத்ன,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழுவின்
செயலாளருக்காக.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
த. பெ. இல. 573,
கொழும்பு 12,
2014, நவெம்பர் 10.

### அட்டவணை

1. காலி.- காலி மாவட்டத்தின் காலி நீதிப்பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

2. கொழும்பு மேற்கு.- கொழும்பு நீதிப் பிரிவுக்குட்பட்ட தெகிவளை, கல்கிஸ்ஸை, இரத்மலானை, நுகேகொடை, பெபிலியான, மஹரகமை, பன்னிபிட்டிய, ஹோமாகம, பொல்கஸ்ஓவிட்ட, இங்கிரிய, ராஜகிரிய, பத்தரமுல்லை, அத்துருகிரிய பிரதேசங்களுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்படி நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**1965 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான முஸ்லிம் விவாக, விவாகநீக்கச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் ....................................... பிரதேசத்துக்கான காதிப் பதவி**

1. முழுப்பெயர் :

2. முதலெழுத்துக் களுடன் பெயர் :

3. நிரந்தர முகவரி :

4. அஞ்சல் முகவரி :

5. பிறந்த திகதி :

6. வயது :

7. தேசிய இனம் :

8. சமயம் :

9. தே. அ. அ. இல. :

10. தொலைபேசி இலக்கம் :

11. கல்வித் தகைமைகள் :

12. தொழில் தகைமைகள் :

13. விண்ணப்பதாரி எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

14. விண்ணப்பதாரிக்கு முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

15. விவாகமானவரா ? :

16. மனைவி உயிருடன் இருக்கின்றாரா ? :

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) :

| முதல் | வரை | தொழில் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி : ரூ.

19. மாதாந்த வருமானம் : ரூ.

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் : ரூ.

21. சென்ற பத்து வருட காலப்பகுதியினுள் நீங்கள் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீர்களா ? :

22. நீர் வருமான வரி செலுத்துமொருவரா ? :

23. உங்களுக்கெதிராக நீதிமன்றமொன்றில் குற்றவியல் வழக்கேதேனும் உண்டா ? இருந்ததா ? :

24. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் ? :

உங்களைப் பற்றி நன்கறிந்துள்ள உங்களது தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| | |
|---|---|
| (1) பெயர் : | (2) பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொழில் : | தொழில் : |
| உங்களையறிந்துள்ள காலப் பகுதி : | உங்களையறிந்துள்ள காலப் பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

..............................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி ..............................,

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

*11-919*

---

## இலங்கை நிரந்தர வான்படை

வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழ்க்காணும் துறைகளில் வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன :

1. ஆண்/பெண் நிரந்தர வான்படை :

(1) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு இயந்திர வியலாளர் பிரிவு :

(அ) வான் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர் (ஆண்)
(ஆ) தொலைபேசி இயந்திரவியலாளர் (ஆண்)

சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கிலம் உட்பட கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு சித்தியும் அதில் கணிதம் அல்லது விஞ்ஞானத்திற்கு திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) கணினி இயந்திரவியலாளர் (ஆண்).- சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு சித்தி உட்பட 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணினி பாடநெறி பூர்த்தி செய்திருத்தல் அல்லது அத்துறையில் அனுபவம் பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

(2) ***வழங்குநர் பிரிவு :***

(அ) வழங்குநர் உதவியாளர் (ஆண்/பெண்).- சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு சித்தியும் கணிதம், விஞ்ஞானம், வணிகக்கல்வி ஆகியவற்றில் ஒன்றுக்கு திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். கணினி (Microsoft Office Packages) பற்றிய அறிவு விசேட தகைமையாகக் கருதப்படும்.

(ஆ) சீருடை நிர்மாணிப்பாளர் (ஆண்/பெண்).- சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களுக்கு சித்தி உட்பட 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். தையல்

இயந்திரங்களில் (Over lock, Button Hole, Button attendant, Double needle, Bar tack) காணப்படும் திறமை மற்றும் துண்டு இல்லாமல் சீருடை நிர்மாணிப்புத் துறையில் காட்டும் திறமை மற்றும் தையல் இயந்திரங்கள் பற்றிய தொழில்நுட்ப அறிவு விசேட தகைமையாகக் கருதப்படும்.

(3) ***இசைக் கலைஞர் பிரிவு :***

(அ) *இசைக் கலைஞர் (ஆண்)*-(Military Band, Bag Pipe, Papara Band, Rock Band, Eastern Band, Calypso Band, Beat Group, Oriental Orchestra and Sound Operators)).- *சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களுக்கு சித்தி உட்பட 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். வாத்தியக் கருவிகள் வாசிப்பது மற்றும் பாடக்கூடிய திறமை விசேட தகைமையாகக் கருதப்படும்.*

(ஆ) *நடனக் கலைஞர் (ஆண்/பெண்).- சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களுக்கு சித்தி உட்பட 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். மற்றும் நடனத்தில் காட்டக்கூடிய திறமை மற்றும் நடனத்திற் கேற்ற உடலமைப்பு/பாடக்கூடிய திறமை மற்றும் வாத்தியக் கருவிகள் வாசிப்பது/ஒப்படை செய்யக் கூடிய திறமை விசேட தகைமையாகக் கருதப்படும்.*

*2. **நிரந்தர வான்படை** (நேரடி ஆட்சேர்ப்பு) தொழில் துறைகளும் வேண்டிய தகைமைகளும் :*

(1) ***இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு இயந்திர வியலாளர் பிரிவு :***

(அ) வான் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர் (ஆண்)

(ஆ) தொலைபேசி இயந்திரவியலாளர் (ஆண்)

*தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில்/ அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைத் தொடர்பு/இலத்திரனியல்/மின்னியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.*

(இ) *கணினி இயந்திரவியலாளர் (ஆண்).- கணினி இயந்திரவியலாளர் துறையில் 6 மாத முழுநேர பாடநெறியைப் பூர்த்திசெய்திருத்தல் மற்றும் கீழ்க்காணும் துறைகளில் 2 வருட அனுபவம் பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும் :*

- கணினி வலைப்பின்னல்
- மென்பொருள் வடிவமைப்பு
- கணினி வன்பொருள்/கணினி மென்பொருள் பழுது பார்த்தல்

*கணினி இயந்திரவியலாளர் துறையில் 12 மாத அரைநேர பாடநெறி பூர்த்திசெய்திருத்தல் மற்றும் கீழ்க்காணும் துறைகளில் 2 வருட அனுபவம் பெற்றி ருத்தல் (பாடநெறிக் காலம் 50% ஆக இருப்பினும் கவனத்தில் கொள்ளப்படும்.)*

- கணினி வலைப்பின்னல்
- மென்பொருள் வடிவமைப்பு
- கணினி வன்பொருள்/கணினி மென்பொருள் பழுது பார்த்தல்

*நேரடி ஆட்சேர்ப்பின்போது அவர்களின் தகைமை களுக்கேற்ப முன்னணி விமான வீரனாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.*

*3. **ஏனைய தகைமைகள்**.- இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :*

*தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*

*வயது (நிரந்தர-ஆண்).- 2015, சனவரி 20 ஆந் திகதியன்று வயது- 18-23 வரை ;*

*(பெண்).- 2015, சனவரி 20 ஆந் திகதியன்று வயது- 18-22 வயது வரை (திருமணமாகாத).*

*நேரடி (ஆண்).- 2015, சனவரி 20 ஆந் திகதியன்று வயது 18-28 வரை (திருமணமாகிய/திருமணமாகாத)*

*உயரம் (ஆண்-நிரந்தர ஆண்).- 5 அடி 5 அங்குலம்.*

*(பெண்).- 5 அடி 3 அங்குலம்.*

*உடல் நிறை.-* $17 <$ *உடற்பருமன் சுட்டி* $< 26$ *(ஆண்)*
$17 <$ *உடற்பருமன் சுட்டி* $< 25$ *(பெண்)*

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம் }^2(\text{m})}$$

*பார்வை வர்ணப்பதிவு மட்டம்.-* CP2

*தொலைபார்வை.- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி இல்லாமல்)*

**கவனிக்க**.- நேரடியாகச் சேர்த்துக்கொள்ளப்படும் விமான வீரர்கள் பயிற்சியைப் பூர்த்திசெய்து ஒரு வருடத்தின் பின்பு விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

நிரந்தர (ஆண்/பெண்) விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தி யடைவதுடன் அல்லது தொழிற்பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

நடனக் கலைஞராக தேர்ந்தெடுக்கப்படும் நிரந்தர பெண்களுக்கு வான்படையில் இணைந்து 5 ஆண்டுகள் பூர்த்தியடைந்தவுடன் விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

4. பந்தி 1, 2 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற்கொள்ளப்படும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(அ) வான்படை வீரர்/வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய நிரந்தர வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கு அடிப்படைப் பயிற்சியும் அதன்பின் தொழில்துறைப் பயிற்சியும் (நேரடி வீரர்/வீராங்கனைகளுக்கு செல்லுபடியாகாது) வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய் நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

6. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்.-** தெரிவுசெய்யப்படும் நிரந்தர நேரடி வான்படை விண்ணப்பதாரர்கள் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். மேலும், 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது, மீண்டும் அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

8. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| விமான வீரன் | : | ரூபா 1,73,100-6 x 1,740-19 x 2,040 = ரூபா 2,22,300 வருடத்திற்கு |
| முன்னணி விமான வீரன் | : | ரூபா 1,78,320-4 x 1,740-19 x 2,040 = ரூபா 2,22,300 வருடத்திற்கு |
| கோப்ரல் | : | ரூபா 1,83,540-10 x 2,040 - 9 x 2,880 = ரூபா 2,29,860 வருடத்திற்கு |
| சார்ஜன்ட் | : | ரூபா 1,87,620-3 x 2,040 - 9 x 2,880 - 3 x 3,840 = ரூபா 2,31,180 வருடத்திற்கு |
| பிளைட் சார்ஜன்ட் | : | ரூபா 1,91,700-1 x 2,040-9 x 2,880-3 x 3,840 = ரூபா 2,31,180 வருடத்திற்கு |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 1,99,500-7 x 2,880-14 x 3,840 = ரூபா 2,73,420 வருடத்திற்கு |
| பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர் | : | ரூபா 2,23,500-13 x 3,840 = ரூபா 2,73,420 வருடத்திற்கு |

மேற்குறிப்பிட்டவாறு சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவைக்காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகிய வற்றிற்கிணங்க உயர் நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க வான்படை வீரர்/வீராங்கனை சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.

(ஆ) **வேறு கொடுப்பனவுகள் :**

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 7,800 ரூபா ;

(2) கடினப்படி மாதமொன்றுக்கு 600 ரூபா ;

(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு 3,900 ரூபா வழங்கப்படும் ;

(4) விசேட கடினப் படி.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு 2,400 ரூபா வழங்கப்படும் (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதம்) ;

(5) விசேட கொடுப்பனவு.- அடிப்படை சம்பளத்தில் 15% மற்றும் 750 ரூபா ;

(6) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் 5 வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும் (மாதமொன்றுக்கு 250 ரூபா இலிருந்து 850 ரூபா வரை) ;

(7) உணவுக் கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரர்/வீராங்கனை மாதமொன்றுக்கு 13,197 ரூபா (உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவச உணவு வசதி) ;

(8) சீருடைக் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு 170 ரூபா வழங்கப்படும் ;

(9) மேலதிகக் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு 1,000 ரூபா வழங்கப்படும் ;

(10) தங்குமிட வசதி.- உள்ளே தங்கும் வான்படை வீரர்களுக்கு இலவசம் ;

(11) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர்/வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு ;

(12) கலவரகாலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும். (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(13) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சிநெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(14) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு 30 ரூபா இலிருந்து 511 ரூபா வரை வழங்கப்படும் ;

(15) *மீள அமர்த்தலுக்கான சம்பளம்.- மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் 300 ரூபாவுக்கு உரித்துடையவராவர் ;*

(16) *மருத்துவம்.-* வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும் ;

(17) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும் ;

(18) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு 1,200 ரூபா இருந்து 3,300 ரூபா வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர் ;

(19) *விரிவுரையாளர் கொடுப்பனவு.-* மாதமொன்றுக்கு ரூபா 425 இலிருந்து 510 ரூபா வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர் ;

(20) வேறு கொடுப்பனவுகள் (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்ட திட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும் ;

(21) ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப் படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவு தொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

9. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்.-** (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா) ;

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ் ;

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழில்துறை/தொழில்நுட்பப் பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பக்காரரின் தொழில்தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்) ;

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள், சாரணர் முதலிய வற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

10. நேர்முகப் பரீட்சை இலங்கை வான்படை, ஏக்கலையில் ஆண் விண்ணப்பதாரர்களுக்கு 2014, திசெம்பர் மாதம் 05, 08 மற்றும் 09 ஆந் திகதிகளிலும், பெண் விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகப் பரீட்சை 2014, திசெம்பர் 10 மற்றும் 11 ஆந் திகதிகளில் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 13.00 மணிவரை நடைபெறும்.

11. கேட்கப்படும் ஆவணங்களை முன்வைக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய செலவில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டும்.

13. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய ஆள் அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய ஆள் அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய ஆள் அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்.

14. இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வுசெய்யப்படுவர்.

15. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகைமையிழக்கச் செய்யும்.

16. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படின் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கும் விண்ணப்பக்காரரை ஆளாக்கும்.

17. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

கே. ஏ. குணதிலக்க,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர வான்படை**

வான்படை வீரர்/வீராங்கனைகளுக்கான ................................. பதவி

1. முழுப் பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு) :----.
2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.
4. அஞ்சல் முகவரி :----.
5. நிரந்தர முகவரி :----.
6. நிரந்தர முகவரிக்கு அண்மையில் உள்ள வான்படைத் தளம் :----.
7. நிரந்தர முகவரிக்கு அண்மையில் உள்ள பொலிசு நிலையம் :----.
8. மாவட்டம் :----.
9. தேர்தற் தொகுதி :----.
10. கிராம அலுவலர் பிரிவு :----.
11. தொலைபேசி இலக்கம் :----.
12. பிறந்த திகதி :----.

    ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.
13. வயது.- 2015, சனவரி 10 ஆந் திகதியன்று-

    வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
14. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.
15. பால் :----.
16. உயரம் :

    அடி ---- அங்குலம் ----.
17. க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

18. க. பொ. த. (உ. த.) பரீட்சை :----.

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

19. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் :----.
20. விளையாட்டுத் துறையில் தற்போதைய சாதனைகளின் விபரம் : ----.
21. பாடசாலை அல்லது வேறு நிறுவனங்களில் பெற்ற தகைமைகள் : ----.
22. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப்படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலீசில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.
23. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீரா ? அல்லது பிணையில் விடப்பட்டுள்ளீரா ? அப்படியாயின் விபரங்கள் தருக ? :----.
24. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

25. **விண்ணப்பக்காரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :**

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத் துள்ள விடைகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் எட்டிய வகையில் சரியானவை என என் மீது ஆணையாக வெளிப்படுத்துகின்றேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படைக்கு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவற்றுக்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11-848

---

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

(சமூக சேவைகள் அமைச்சு)

பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

1. **பதவி**.- மேலதிக பணிப்பாளர் நாயகம் (கல்வி நடவடிக்கைகள்) (பதவி 1)

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 25 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) (அ) கல்வித் தகைமை.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் இளமானிப் பட்டத்துடன் சமூகப் பணியில் (Social Work) முதுமாணி பட்டம் பெற்றிருத்தல்.

(ஆ) அனுபவம்.- அரச அல்லது அரசாங்க நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 15 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் (இச்சேவைக் காலத்தில் ஆகக்குறைந்தது 3 வருடங்கள் சமூகப் பணியில் (Social Work) முதுமாணி பட்டம் பெற்ற பின்னராக இருத்தல் வேண்டும்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எச்எம் 2-1
ரூபா 44,030 - 12 X 1,310 - ரூபா 59,750 (மாதம்)

2. **பதவி**.- பேராசிரியர் (பதவி 1) :

(i) வயதெல்லை.- 55 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

(ii) கல்வித் தகைமை.- (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/உயர் கல்வி நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சமூகப் பணி/சமூக விஞ்ஞானப் பாடங்களில் முதற்தர சித்தி அல்லது 2 ஆம் தர (உயர்) சித்தியுடன்கூடிய பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட சமூகப் பணி/ சமூக விஞ்ஞானப் பாடங்களில் தரச் சித்தி இல்லாத பட்டத்துடன் சமூகப்பணி, சமூக நலன்புரி, சமூகக் கொள்கை, உளவளத்துணை, சமூக/ சமுதாய அபிவிருத்தி ஆகிய பாடங்களில் அல்லது துறைகளோடு தொடர்புபட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட/குறைந்தது ஒரு வருட காலத்திற்கு குறையாத முதுமாணி பட்டம்

மற்றும்

குறித்த பேராசிரியர் பட்டம் பெற்றதன் பின்னர் பல்கலைக்கழக மட்டத்தில் விரிவுரை மேற்கொண்டிருத்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் குறைந்தது 10 வருட அனுபவத்துடன் கல்வி நிருவாகத்தில் போதிய அனுபவம் பெற்றிருத்தல்.

அல்லது

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 10 வருட சேவைக்கால அனுபவத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட/குறைந்தது ஒரு வருட காலத்திற்கு குறையாத கலைமாணி பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

ஆங்கில மொழியில் சிறந்த முறையில் பணியாற்றும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எச்எம்2-3-2006
ரூபா 47,245 - 12 X 1,310 - ரூபா 62,965 (மாதம்)

3. **பதவி**.- சிரேஷ்ட விரிவுரையாளர் (பதவி 1) :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.- (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் இளமானிப் பட்டத்துடன் சமூகப்பணியில் (Social Work) கலாநிதி பட்டம் பெற்றிருத்தல்.

அனுபவம்.- அரச அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் 10 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணிக் கற்றல் மற்றும் கற்பித்தல் துறைகளில் அனுபவமிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- ஏஆர் 2-2006ஏ
ரூபா 34,550 - 10 X 925 - 43,880 ரூபா (மாதம்)

4. **பதவி**.- சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் (பதவி 1) :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞான பாடங்களில் கலைமானி பட்டத்தினையும் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 10 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணி ஆய்வுத் துறையில் அனுபவமிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் இளமானிப் பட்டத்துடன் சமூக விஞ்ஞானத்தில் முதுமாணி பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட நிறுவனமொன்றில் 15 வருடத்திலும் குறையாத வகையில் சமூகப்பணி ஆய்வுத் துறையில் அனுபவமிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- ஏஆர் -2-2006ஏ- ரூபா 34,550 - 10 X 925 - ரூபா 43,880 (மாதம்)

5. **பதவி**.- கற்புல செவிப்புல நுட்பவியலாளர் (பதவி 1) :

(i) வயதெல்லை.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது இந்நிறுவனத்தில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.- (அ) கல்விப் பொதுத்தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம், கணிதம் மற்றும் ஏனைய இரு பாடங் களுக்கு விசேட சித்தியுடன் ஒரே அமர்வில் (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத்தராதர (உ. த.) பரீட்சையில் விஞ்ஞான பாடத்துறையில் அனைத்து பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்து மூன்றாம் நிலைக் கல்வியைத் தொடர்வதற்கான தகுதியினைப் பெற்றிருத்தல்.

(இ) தொழில்நுட்ப திறன்/ ஆற்றல்.- ஒவ்வொரு பதவிக்குமான கடமைகள் பொறுப்புகளுக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழிற்திறன் தகைமையில் (NVQ) ஐந்தாம் (5) தரத்திற்கு குறையாத செவிப்புல கட்புல தொழில்நுட்ப பாடநெறியொன் றினை வெற்றிகரமாகப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- எம்ஏ 2-2-2006ஏ ரூபா 14,610 - 10 X 145 - 7 X 170 - 4 X 290 - 20 X 345 - 25,310 ரூபா (மாதம்)

6. **பதவி**.- கட்புல செவிப்புல நுட்பவியலாளர் III (பதவி 1) :

(i) வயதெல்லை.- 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது இந்நிறுவனத்தில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.)

(ii) கல்வித் தகைமை.- (அ) கல்விப் பொதுத்தராதர (சா. த.) பரீட்சையில் குறைந்தது இரு பாடங்களில் (02) சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

(ஆ) தொழில்நுட்ப திறன்/ ஆற்றல்.- பதவிக்குரிய தொழில்நுட்ப பொறுப்புகளுக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் நியமிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழிற்திறன் தகைமையில் (NVQ) 2 அல்லது 3 ஆம் தரத்திற்கு சமமான தகுதியினைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(இ) தொழில் அனுபவம்.- இலத்திரனியல் மற்றும் கட்புல செவிப்புல உபகரணங்கள் தொடர்பான சிறந்த அறிவு இருத்தல், அவற்றைச் செயற்படுத்தல், பாதுகாப்பு மற்றும் பேணுதல் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் 5 வருடங்கள் பணிபுரிந்த அனுபவம்.

குறிப்பு.- புகைப்படக் கலையில் விசேட ஆற்றலை விசேடமாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

(iii) சம்பள அளவுத்திட்டம்.- பீஎல்2 2-2-2006ஏ ரூபா 12,410 - 10 X 130 - 10 X 145 - 10 X 160 - 12 X 170 - ரூபா 18,800 (மாதம்)

**மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :**

(1) பதவி நிரந்தரமானது ;
(2) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;
(3) மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தல்.

**குறிப்பு**.- இப்பதவி வெற்றிடங்கள் நாவலை, ராஜகிரியவில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திலேயே காணப்படுவதுடன் இந்நிறுவனத்திற்கு கிளைகள் இல்லை. தெரிவாகும் விண்ணப்பதாரிகள் பின்வரும் விலாசத்தில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் மாத்திரம் பணிபுரிதல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**.- 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2014.12.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

கலாநிதி ரிட்லி ஜயசிங்க,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
இல. 488ஏ, நாவல வீதி,
இராஜகிரிய,
2014, நவெம்பர் 12.

11-767

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத என்ஜின் சாரதி பதவியின் III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2014

இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத என்ஜின் சாரதி தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2014.12.26 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாததும் 30 வயதிற்குக் கூடாததுமான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2014.12.26 ஆகும். சகல விண்ணப்பப் படிவங்களும் இத்தினத்திற்கு முன்பு "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, திட்டமிடல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். எந்த விண்ணப்பப் படிவமும் தனிப்பட்ட பெயருக்கோ அல்லது கையில் கொண்டுவந்து பாரமளித்தலோ செய்யக்கூடாது. பூரணமற்ற மற்றும் முறையற்ற, தேவையான தராதரங்களைக் கொண்டிராத, உரிய முறையில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் தாமதித்து அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்கள் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு தமது திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். இப்பரீட்சையை நடாத்துவதற்கான பரீட்சை நிலையம் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நகரங்களும் அதன் இலக்கங்களும் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் இந்நகரத்தையும் அதன் இலக்கத்தையும் தேர்ந்தெடுத்து பூரணப்படுத்தல் வேண்டும். தேர்ந்தெடுத்த நகரத்தை பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இருந்தும் போதியளவான விண்ணப்பதாரிகளைக் கொண்டிராத நகரங்களின் விண்ணப்பதாரிகள் கிட்டிய ஏனைய பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர். எவ்வாறிருந்தும் குறித்த சகல நகரங்களிலும் அல்லது கூடுதலான நகரங்களில் பரீட்சை நிலையம் அமைப்பதற்குப் போதுமானளவு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

### 1 ஆம் அட்டவணை

*பரீட்சை நிலையம் அமையப்பெறும் நகரங்களும் அதன் இலக்கங்களும்*

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணறாகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

1. **விண்ணப்பம் கோரப்படும் பதவி**.- இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத என்ஜின் சாரதி III ஆம் தரம்.

2. **பதவியின், கடமையின் தன்மை**.- இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத இயக்க ஓட்டச் செயற்பாட்டின்போது புகையிரத என்ஜின் சாரதியின் கடமையின் பொருட்டு விசேடமான தொழில்நுட்ப திறமை அதாவது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும்படி தேசிய தொழில் திறன் மட்டம் 6 இன்கீழ் உள்ளடக்கப்படும் குறித்த தொழில்நுட்ப திறமையை உள்ளடங்கலாக புகையிரத என்ஜினை செயற்படுத்தல் நடவடிக்கையை மேற்கொள்ளல் மற்றும் பேணுகை செய்தலுக்குத் தேவையான போதுமான அடிப்படைத் தேவைகளை மேற்கொள்ளும் சேவைத் தரமாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- புகையிரத என்ஜின் சாரதி தரம் III இற்கான சம்பள அளவுத்திட்டம் (எம்என்-3-2006-ஏ) ரூபா 15,005-4 x 180-6 x 240- 11 x 320-20 x 360-ரூபா 27,885 ஆகும்.

4. (அ) **கல்வித் தகைமைகள் :**

(I) மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞான விடயத்துடன் 4 விடயங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

உடன்

(II) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் தூயகணிதம், பௌதிக விஞ்ஞானத்துடன் மேலும் ஒரு விஞ்ஞான விடயம் உட்பட சகல விடயங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டத்தின்கீழ் விஞ்ஞான விடயம் மூன்றில் (03) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.)

(ஆ) **தொழிற் தகைமைகள்**.- கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளில் ஒன்றை அல்லது இரத்மலானை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் அல்லது அரச தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது தேசிய பயிலுனர்கள் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையின்கீழ் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது இரண்டு வருட முழுநேர டீசல் என்ஜின் சம்பந்தமாக பாடநெறியைக் கற்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். இப்பாடநெறி தேசிய தொழில் திறமை மட்டம் 6 இற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் :

(I) மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

(II) தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியலாளர் டிப்ளோமா

அல்லது

(III) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியலாளர் டிப்ளோமா

அல்லது

(IV) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா

(இ) **உடற்தகுதி :**

(i) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை புரிவதற்கு சகல உடற்தகுதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் கடமைகளை மேற்கொள்ளக்கூடியளவுக்கு போதுமான உடற்தகுதிளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) உயரம் 5 அடி 4 அங்குலத்திற்கு குறையாமலும், நெஞ்சளவு வெளிச்சுவாசத்தின்போது 32 அங்குலத்திற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) 6/ 6 அளவுள்ள கண் பார்வை பரிசோதனையிலும் தகுதிபெறல் வேண்டும்.

(ஈ) **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியுமாகும்.

***குறிப்பு.***- விண்ணப்பதாரி இவ்வறிவித்தல் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று சகல தகுதிகளையும் பெற்றிருந்தால் மாத்திரமாகும். தராதரங்களை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி சான்றிதழ்களின் புகைப்படப் பிரதி விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை.**- மேலுள்ள (04) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சையை நடாத்தி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் விண்ணப்பப்படிவம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்படுவதுடன் காத்திருப்போர் இடாப்பில் வைத்து ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டாது.

6. **ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பரீட்சைத் திட்டம்** :

(i) இப்பரீட்சை பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும்.

(ii) பரீட்சை முறை :

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் ;

(ஆ) சகல கேள்விகளுக்கும் தோற்ற முடிவது மேற்குறிப்பிட்ட (04) இன்கீழ் தகுதிபெற்றுள்ள மொழி மூலம் மாத்திரமாகும். தேர்ந்தெடுத்த மொழி மூலத்தை பின்பு மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படாது.

(iii) பரீட்சை விடயங்கள் :

(அ) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு
(ஆ) தொழில்நுட்ப அறிவு

(iv) விடய உள்ளடக்கம் :

(அ) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு
(காலம் : 1 மணித்தியாலம்) - புள்ளி 100 ஆகும்.

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான ஆற்றலையும், விவரிக்கும் ஆற்றலையும், சரியான தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும் பொது அறிவையும் புத்திக்கூர்மையையும் அளவிடும் வகையில் இக்கேள்வித்தாள் அமையப் பெற்றிருக்கும். இது கணிதக் குளறுபாடுகள் பொது அறிவு, சுற்றாடல் சம்பந்தப்பட்ட 50 கேள்விகளை உள்ளடக்கிய பல்வித மற்றும் சுருக்க விடை வழங்கப்படும் அமைப்பைக் கொண்ட கேள்வித்தாளாகும். சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(ஆ) தொழில்நுட்ப அறிவு (காலம் : 3 மணித்தியாலம்)
- புள்ளி 100 ஆகும்.

டீசல் என்ஜின் தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான அறிவு மற்றும் இயந்திர உபகரணம் சம்பந்தமான அறிவை அளவிடும் வகையில் நோக்காகக் கொண்டு இக்கேள்வித்தாள் அமைக்கப்பட்டிருக்கும். சகல கேள்விகளுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(v) *தேர்ந்தெடுக்கும் முறை.*- ஒவ்வொரு விடயத்திலும் தகுதி பெறுவதற்காக 40% புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேல் பெற்ற விண்ணப்பதாரிகள் பரீட்சையில் சித்தியடைந்ததாகக் கருதப்படுவதுடன், இப்பரீட்சையில் இரு விடயங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தராதரங்கள் பரிசீலனை செய்யப்படும். இந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப புகையிரத என்ஜின் சாரதி III ஆம் வகுப்பின் பதவிக்கு நியமிக்கப்படுவர். நியமிப்பு செய்வதற்காக விண்ணப்பதாரிகளைத் தேர்ந்தெடுப்பது மேலுள்ள 6 இல் (iv) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளின்படி பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள திறமையின் வரிசைப்படியாகும்.

(vi) *பரீட்சைப் பெறுபேறு.*- வர்த்தமானி அறிவித்தலின் 6 (v) ஆம் பந்தியின்படி கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் முழுப்புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை ஒன்று புகையிரத பொது முகாமையாளருக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

**7. விண்ணப்பப்பத்திரம் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவதற்குமான அறிவுறுத்தல்.**- (i) விண்ணப்பப்படிவத்தை ஏ-4 (தட்டச்சு கடதாசி) அளவுள்ள கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தில்-

1 ஆம் பக்கத்தில் 1 இலிருந்து 6 வரையிலான விடயங்களும்
2 ஆம் பக்கத்தில் 7 இலிருந்து 10 வரையிலான விடயங்களும்
3 ஆம் பக்கத்தில் 11 இலிருந்து 12 வரையிலான விடயங்களும்
4 ஆம் பக்கத்தில் 13 ஆம் விடயமும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், பூரணமற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் புகைப்படப் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளல் உமக்கு பிரயோசனப்படக் கூடியதாகவிருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா என்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது தலைப்பில் கொடுக்கப் பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியமாகும்.

(ii) குறிப்பிட்ட பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் 600 ரூபாவாகும். அதை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-103 இற்கு வரவிலிடும் வகையில் நாட்டின் எப்பாகத்திலேனும் அமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்த முடியுமாகும். அவ்வாறு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(iii) இப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை இணைத்தல் மற்றும் வேறு வழிகளில் பணம் செலுத்துதல் விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும். பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசன முடையதாக இருக்கும்.

(iv) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத என்ஜின் சாரதி - III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2014" எனவும் நீர் பரீட்சைக்கு தோற்ற தேர்ந்தெடுத்த நகரத்தையும் அதன் இலக்கத்தையும் குறிப்பிடவும்.

(v) வெளி விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், அ. நி. சு. இல. 06/2006 இன்படி ரூபா 19,755 ஆன மாதாந்த ஆரம்ப சம்பளத்தை அல்லது அதற்கு கூடிய ஆரம்ப சம்பளத்தை பெறும் அரச உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(vi) தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோத்தர்களின் கையொப்பம் தமக்கு கிட்டிய சேவைப் பிரதானியினால் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் விண்ணப்பப்படிவம் திணைக்கள பிரதானியினூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(vii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரங்களை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்று கருத்திற்கொண்டு குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள குறிப்பிட்ட தினம் அல்லது அத்தினத்திற்கு முன்பு விண்ணப்பப்படிவம் முன்வைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளரினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்படல் இப்பதவிக்கு விண்ணப்பதாரி தகுதி பெற்றுள்ளார் எனக் கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின்படி தராதரங்களைக் கொண்டுள்ளாராவென பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தராதரங்கள் இல்லை என தெரியவருமிடத்து அவ் விண்ணப்பதாரியின் பரீட்சை போட்டியிடுகை இரத்துச்செய்யப்படும்.

(viii) விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் விடுக்கப்பட்டு இரண்டு மூன்று நாட்களுக்கு பிறகாவது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரிவித்தல் வேண்டும். நீர் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிப் படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியையும் பதிவுத்தபால் மூலம் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியேயான பிரதேசமாக இருப்பின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்ட உமது வேண்டுகோள் கடிதத்தையும் உம்முடன் வைத்துக் கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்துனட் விசாரித்தறியுமாறு கேட்கப்படுவதுடன், கொழும்புக்கு வெளியிலான விண்ணப்பதாரியாயின் உமது மேற்குறிப்பிட்ட விடயத்துடன் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியை தொலைநகல் மூலம் பெற்றுக்கொள்வதற்காக தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்ட வேண்டுகோள் கடிதத்தினை முன்வைத்தல் மிகவும் பிரயோசனமுடையதாக இருக்கும்.

(ix) பரீட்சை விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு முன்பு தமது பரீட்சை அனுமதி அட்டையின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளில் பரீட்சை மேற்பார்வை யாளரிடம் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை முன்வைக்க வேண்டியதுடன், அவ்வாறில்லாதவிடத்து பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.

(x) இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் உறுதிப்படுத்துவதற்காகவேண்டி ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திர மாகும்.

(xi) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தராதரங்களை பெற்றுள்ளார் எனக் கருதப்பட மாட்டாது.

(xii) பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்பட்டவர்களாகும். அச்சட்டதிட்டங்களை மீறுகின்றபோது பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும்.

**8. சேவை நிபந்தனை.**- ஆட்சேர்ப்பு செய்யப்படுவது III ஆம் தரத்திற்காகும்.

**9. சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை.**- (i) இப்பதவி நிரந்தர மானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். தற்போது விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மேலும் அதற்காக பங்குப் பணம் செலுத்துதல் வேண்டும்.

(ii) திறந்த போட்டிப் பரீட்சை மூலம் சகலரும் இரு வருட பயிலுனர் காலத்திற்கு (இப்பயிற்சிக் காலம் உச்சளவு 3 வருட காலமாக திருத்தியமைக்க வாய்ப்புள்ளது.) அக்காலத்திற்குள் புகையிரத என்ஜின் சாரதி பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான தத்துவ ரீதியிலான அறிவையும், தொழில் பயிற்சியையும் மற்றும் திறமையை மேற்படுத்திக்கொள்வதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படும். பயிற்சிக் காலத்திற்குள் அப்பயிலுனர்கள் நியமிக்கப்படும் பகுதியின் மேற்பார்வைக்கும் நிருவாகத்திற்கும் உட்படல் வேண்டும். ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 7:2 உப பிரிவில் காணப்படும் வழிகளில் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் பயிலுனர் உத்தியோகத்தர் பயிலுனர் பயிற்சி இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாதவிடத்து அப்பயிலுனர் உத்தியோகத்தரின் சேவை முடிவுறுத்தப்படும்.

(iii) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இன் ஏற்பாட்டின்படி அரச சேவைக்குச் சேர்ந்த மொழியைத் தவிர்ந்த மற்றைய அரச கரும மொழி தேர்ச்சியை 5 வருட காலத்திற்குள் பெறல் வேண்டும். அத்தேர்ச்சியை பெறாத உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றம் தேர்ச்சியைப் பெறும் வரையில் மறுக்கப்படும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக்கோவையினதும், நிதிப்பிரமாணத்தினதும் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள தாபன செயற்பாட்டு அமைப்பு நியதிகள் கோவையின் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும். மற்றும் அடிக்கடி அரசாங்கத்தினால் விடுக்கப்படும் கட்டளைகளுக்கும், திணைக்கள உபதேசங்களுக்கும் கீழ்ப்பட்டு செயற்படல் வேண்டும்.

வீ. அமரதுங்க,
புகையிரத பொது முகாமையாளர்.

(இதன்படி ஏ-4 கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு முன்பு விண்ணப்பம் கோரல் அறிவித்தலை வாசித்து நன்றாக புரிந்து கொள்ளவும்.)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை புகையிரத திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் புகையிரத என்ஜின் சாரதி பதவி - III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை-2014**

Open Competitive Examination for Recruitment for The Post of Engine Driver Grade - III Sri Lanka Railway Department - 2014

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

பிரசாவுரிமை :
பரம்பரை மூலம் - 1
பதிவு மூலம் - 2
(குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

| பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் : | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1 ஆவது விருப்பம்<br>2 ஆவது விருப்பம் | | |
| பரீட்சை அறிவித்தலின் முதல் பந்தியை பார்க்கவும். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்பு மாற்ற இடமளிக்கப்படமாட்டாது. | | |

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.
   (உதா : GUNAWARDHANA, M. G. B. S. K.)

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.

3. நிரந்தர முகவரி :–
   (i) சிங்களத்தில்/தமிழில் :————.
   (ii) ஆங்கிலத்தில் :————.

4. ஆண்/பெண் தன்மை :—
   பெண் - 1
   ஆண் - 0
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

6. இனத் தொகுதி :
   சிங்களம்-1, இலங்கைத் தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, மலாயர்-6
   (பொருத்தமான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

7. வதிவிடம் :
   (i) கிராம அலுவலர் பிரிவு :————.
   அதன் இலக்கமும் :————.
   (ii) பிரதேச செயலாளர் பிரிவு :————.
   (iii) மாவட்டம் :————.

8. (i) பிறந்த திகதி :–
   ஆண்டு : மாதம் : திகதி :
   (ii) 2014.12.26 ஆந் திகதியன்று வயது :–
   வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

9. (அ) கல்வித் தராதரம் :

(i) க. பொ. த. (சா. தரம்) :
சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | | |

(ii) க. பொ. த. (உயர் தரம்) :
சுட்டெண் :————, வருடம் :————.

| தொடர் இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | |

(ஆ) தொழில் தராதரம் :----.

10. நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(ஏற்புடைய கூட்டில் ✓ அடையாளம் இடுக)

11. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மை யானதெனவும் சரியானதெனவும் தெரிவித்துக்கொள் கிறேன். இதில் ஏதாவது பகுதி பூரணப்படுத்தப்படாததால் அல்லது பிழையான முறையில் அல்லது உண்மைக்குப் புறம்பான முறையில் பூரணப்படுத்தப் பட்டிருப்பின் விண்ணப்பத்தன்மை இரத்துச்செய்யப்படும் என்பதை நான் நன்றாக அறிவேன். அதனால் ஏற்படும் நஷ்டத்தை நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்வேன்.

(ஆ) மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நான் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பிறகு தெரியவருமிடத்து பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். அதன் மூலம் ஏற்க நேரும் நஷ்டத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்வேன்.

(இ) 201 ............................ ஆந் திகதி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு ரூபா 600 ஐச் செலுத்திப் பெற்றுக் கொண்ட இலக்கம் ............................... உடைய பற்றுச் சீட்டு இத்துடன் இணைத்துள்ளேன்.

பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு அதன் ஓரத்தில் ஒட்டவும் (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்மிடம் வைத்துக்கொள்ளவும்)

(ஈ) இப்பரீட்சையின் நிபந்தனைகளை கடைப்பிடிக்க இணங்கு கிறேன்.

(உ) மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக புகையிரத ஆணையாளரினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் .................... ஆந் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.

(தயவுசெய்து உத்தியோகபூர்வ இலச்சினையைப் பொறிக்கவும்.)

13. **திணைக்கள/நிறுவன தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு. ................. ................. அவர்கள் .............................. திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................................. ஆக சேவை புரிகிறார். அவருக்கு எதிராக முற்றுப்பெறாத ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளது/இல்லை. அவரின் வேலை நடத்தை, வேலைக்கு சமுகம் தரல் திருப்திகரமானது/அதிருப்திகரமானது. குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது. அவர் புகையிரத திணைக்களத்தின் புகையிரத என்ஜின் சாரதி - III ஆம் தரத்திற்கு தேர்ந்தெடுக்கப் படுமிடத்து இத்திணைக்களத்திலிருந்து/ நிறுவனத்திலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாதென தெரிவித்துக் கொள்கிறேன். (பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்.)

————,
திணைக்கள/நிறுவன தலைவரின்
கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
திகதி :————.

(தயவுசெய்து உத்தியோகபூர்வ இலட்சினையைப் பொறிக்கவும்.)

11-876

## கல்வி அமைச்சு

ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியைப் பின்பற்றுவதற்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2015/2016

1. ஆசிரியர் கல்லூரிகளில் ஈராண்டு கால ஆசிரியப் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்குப் பின்வரும் தகைமைகள் கொண்ட ஆசிரியர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

1.1. அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது கல்விச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அல்லது மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கையொப்பத்துடன் முறையான நியமனத்தைப் பெற்று அரசாங்கப் பாடசாலைகளில் பணியாற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்கள்,

1.2. கல்வியமைச்சின் தனியார் பாடசாலைகளின் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தனியார் பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்றும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் அனுமதியளித்துள்ள நியமனங்களைக் கொண்டுள்ள ஆசிரியர்கள்,

1.3. கல்வியமைச்சின் பிரிவெனா கல்விப் பிரிவில் பதிவுசெய்யப் பட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட நியமனங்களைக் கொண்ட பிரிவெனா ஆசிரியர்கள்,

1.4. மகரகமை தேசிய கல்வி நிறுவகத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட தொலைக்கல்வி அல்லது பிரின்செட் அல்லது பட்டதாரியல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களைப் பயிற்று விக்கும் வார இறுதி பாடநெறியில் ஆசிரியர் பயிற்சிநெறியை மேற்கொண்டு சித்திபெறவில்லையென தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள்.

**2. விசேட அறிவுறுத்தல்கள் :**

2.1 தெரிவானது ஆசிரியர் கல்லூரியில் காணப்படும் வெற்றிடத் திற்கேற்ப பாடசாலையில் கடமையேற்றதன் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஆசிரியர் சேவை பதவி உயர்வின்போது தொழில்சார் தகைமை இல்லாமையால் பாதிப்பேற்படுவது மட்டுமன்றி பாடசாலைக் கல்வியின் தரவிருத்தியை மேம்படுத்துவதற்குத் தடையாகவும் அமையும். இவற்றைக் கருத்திற்கொண்டு பட்டதாரியல்லாத பயிற்றப் படாத ஆசிரியர்கள் பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

2.2 இப்பயிற்சிநெறி ஈராண்டுகால உள்ளகப் பயிற்சியாக அமைவதுடன் விடுதி வசதிகள் இல்லாதவிடத்து கல்லூரி அதிபரின் எழுத்துமூல அனுமதியுடன் கல்லூரிக்கு அண்மை யில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்படும்.

2.3 ஒவ்வொரு கல்லூரியிலும் நடத்தப்படும் பயிற்சிநெறிகள் அக்கல்லூரிகளில் காணப்படும் வளங்கள் மற்றும் வசதிகள் என்பவற்றிற்கேற்ப தீர்மானிக்கப்படுவதனால் எப்போதும் கிட்டிய கல்லூரியைப் பெற்றுத்தர முடியாதிருக்கும்.

2.4 ஆசிரியர் கல்லூரியின் பயிற்சிக்காலப்பகுதியில் வேறு பாடநெறிகளைப் பின்பற்றுவதோ வேறு வெளிவாரிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதோ கூடாது. அது தொடர்பாகக் கிடைக்கப்பெறும் தகவல்கள் மற்றும் பாடநெறியை விட்டுச்செல்லல் தொடர்பில் முறையான விசாரணையின் பின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.5 பின்வரும் ஆசிரிய வகையினருக்கு இப்பாடநெறி பொருந்தாது :

(அ) ஏதாவதொரு ஆசிரிய கல்லூரியொன்றில் பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருக்கும் அல்லது பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள் ;

(ஆ) பட்டதாரி நியமனம் அல்லது பட்டதாரிப் பயிலுநர் நியமனம் அல்லது பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர் நியமனம் அல்லது அதற்குச் சமமான ஏதாவதொரு பட்டதாரி நியமனம் பெற்றுள்ளவர்கள் ;

(இ) இதன் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைப் பெற்றிராத ஆசிரியர்கள்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் பாடநெறிக்கு அனுமதிக்கப்பட் டுள்ளதாக அறியவரக்கூடிய எச்சந்தர்ப்பத்திலும், பயிலும் காலத்திலாயின் பயிற்சி இரத்துச் செய்யப் படுவதோடு பயிற்சியின் பின்பாயின் அவரின் சான்றிதழ் செல்லுபடியற்றதாக்கப்படும்.

2.6 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களை பயிற்சிக்காக பதிவு செய்வதற்கு அழைக்கப் படும் தினத்தன்று ஒப்படைக்க வேண்டும் :

(அ) பூரணப்படுத்தப்பட்ட பிணைமுறி ;

(ஆ) ஆசிரிய கல்விப் பாடநெறியைப் பூர்த்திசெய்த பின் நியமனம் வழங்கப்படும் பாடசாலைகளில் (அரசாங்க ஆசிரியர்கள் அரசாங்கப் பாடசாலைகளுக்கும் அரசாங்க சேவையில் இல்லாத ஆசிரியர்கள் உரிய நிருவாகக் குழுவின் கீழும்) தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் சேவை செய்வதாக அரசுடன் அல்லது நிர்வாகக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தப் பத்திரத்தின் பிரதி ;

2.7 1982 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாதத்தின் பின்பு மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் நியமனம் பெற்று பயிற்சிக்காகச் சேரும் ஆசிரியர்கள் பயிற்சியின் பின்பும் முதல் நியமனம் பெற்ற அம்மாவட்டங்களிலேயே கடமையாற்றுவதற்குக் கேட்டுக் கொள்ளப்படுவர்.

2.8 ஆசிரிய கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட பின் ஒரு பயிற்சி ஆசிரியர் தனது விருப்பத்தின் பேரில் பயிற்சியினை இடைநிறுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு விலகினால் பயிற்சிக்கால அரச செலவினங்களை மதிப்பிட்டு மேலதிக கட்டணத்துடன் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

2.9 வர்த்தமானி அறிவித்தலில் மேற்கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எழும் பிரச்சினைகள் தொடர்பாக இறுதித் தீர்மானம் கல்வி அமைச்சின் செயலாளரால் எடுக்கப்படும்.

3. (i) ஆசிரிய கல்லூரி அதிபரினால் எதிர்பார்க்கப்படும் மட்டத்திற்கு வரவு மற்றும் கற்றலில் ஊக்கம் காட்டாத, பயிற்சிக் காலத்தில் கல்லூரிகளின் ஒழுக்காற்று ஒழுங்கு முறைகளை அனுசரித்து நடக்கத்தவறும் பயிற்சியாளர்கள் பயிற்சியிலிருந்து நிறுத்தப்படுவர். பயிற்சி பெறும் ஒரு ஆசிரியரின் பாடங்களுக்கான பங்களிப்பு, வரவு என்பன 80% இற்குக் குறைவாயின் அவர் ஆசிரிய கல்லூரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. எனினும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் விசேட காரணங்களைக் கருத்திற்கொள்ள வேண்டியிருப்பின் இது தொடர்பாக கல்விச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) விடுமுறை.- நிறுவனப் பயிற்சிக்காக ஈராண்டு முழுச்சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இக்கற்கை விடுமுறைக் காலத்தை முழுமையாகப் பயிற்சிக்காகப் பயன்படுத்த வேண்டும். எனினும் ஆசிரிய பயிற்சி பெறுபவருக்கு அவசியமென அதிபர் திருப்தியடையக்கூடிய பட்சத்தில் மாத்திரம் குறிப்பிட்ட நாட்கள் அமைய விடுமுறை வழங்கப்படலாம். அதற்காக அதிபரின் முன்னனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை கருத்திற்கொள்ளவும். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் விடுமுறை ஆண்டுக்கு பத்து (10) நாட்களுக்குக் கூடாதிருக்க வேண்டும்.

அதிக விடுமுறைகளைப் பெற்றுக்கொள்வதன் காரணமாக, பாடநெறியைப் பின்பற்றுவதில் முன்னேற்றம் திருப்தியற்றதாக யாராவது ஒரு பயிற்சியாளர் பற்றி அதிபர் அறிக்கை சமர்ப்பிப்பின் பயிற்சியை இடைநிறுத்தி மீண்டும் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவர். வைத்திய விடுமுறைகளுக்கு அரசாங்க அனுமதிபெற்ற வைத்தியரின் வைத்தியச் சான்றிதழ் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஆசிரிய கல்லூரியினால் நடாத்தப்படும் உள்ளகப் பரீட்சைகள் மற்றும் ஈராண்டு கால ஆசிரிய பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியதன் பின்னர் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் இறுதிப்பரீட்சையில் சித்தி பெறுவோருக்கு ஆசிரியப் பயிற்சிச் சான்றிதழ் வழங்கப்படும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- ஆசிரியர் சேவைப் பிரமாணத்துக்கு அமைவாகவும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு உட்பட்டதாகவும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட்டு ஏற்புடைய சம்பள அளவுத்திட்டம் நிர்ணயிக்கப்படும்.

6. (i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமன வகைக்கேற்பவே ஆசிரிய பயிற்சியைப் பெறவேண்டும். ஏனைய பாடத்தில் நியமனம் பெற்றவர்கள் விசேட கல்வி பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். அரசாங்க ஆசிரியர்களாக நியமனம் பெற்று அவர்களின் நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்படாதவர்களைப் பொறுத்தவரை க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் தொடர்புடைய பாடத்தில் அவர்கள் சித்தி பெற்றிருப்பதுடன் குறித்த பாடத்தைக் கற்பிக்கின்றார்களாயின் அவர்கள் விண்ணப்பிக்க முடியும். குறித்த பாடத்தை கற்பிப்பதாக நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

க. பொ. த. (சாதாரண தர) தகைமையின் அடிப்படையில் நியமிக்கப்பட்டு அவர்களின் நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்பட்டிராத ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களாகவே கருதப்படுவர்.

நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்பட்டிராத தனியார், பிரிவெனா ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்கள் கற்பித்த பாடங்களின் அடிப்படையில் பயிற்சிக்காக தெரிவு செய்யப்படுவர். இவ்வகையினர் நிறுவனத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட நேரசூசியின் பிரதி ஒன்றைச் சமர்ப்பித்தல் அவசியமாகும்.

(ii) ஏதாவதொரு பாடநெறியொன்றிற்குப் போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதிருப்பின் அப்பாடநெறியை நடாத்துவது அல்லது நடாத்தாதிருப்பது பற்றி கல்வி அமைச்சின் செயலாளர் தீர்மானிப்பார்.

| | பாடநெறி எண் | பாடநெறியின் பெயர் |
|---|---|---|
| (i) | 01 | சிங்களம் |
| (ii) | 02 | ஆரம்பக் கல்வி |
| (iii) | 03 | சமூகவியல் |
| (iv) | 04 | விஞ்ஞானம் |
| (v) | 05 | கணிதம் |
| (vi) | 06 | விவசாயம் |
| (vii) | 07 | மனையியல் |
| (viii) | 08 | ஆங்கிலம் |
| (ix) | 09 | புத்த சமயம் |
| (x) | 10 | கிறிஸ்தவம் / ரோமன் கத்தோலிக்க சமயம் |
| (xi) | 11 | இந்து சமயம் |
| (xii) | 12 | இஸ்லாம் |
| (xiii) | 13 | சித்திரம் |
| (xiv) | 14 | சங்கீதம் |
| (xv) | 15 | நடனம் |
| (xvi) | 16 | அரபு |
| (xvii) | 17 | விசேட கல்வி |
| (xviii) | 18 | கைப்பணியும், தொழில் நுட்பமும் |
| (xix) | 19 | வணிகம் |
| (xx) | 20 | தமிழ் |
| (xxi) | 21 | உடற்கல்வி |
| (xxii) | 22 | இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) |

7. (i) **தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(I) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருக்க வேண்டும்.

(II) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(III) இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவையில் கணிதம். தாய்மொழி உட்பட 06 பாடங்களில் க. பொ. த. (சா.த) அல்லது தே. பொ. க. த. பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(IV) அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் 2014.11.28 ஆந் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று மாத காலம் ஆசிரியராக தமது சேவையைப் பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

(V) சகல விண்ணப்பதாரரும் தமது நியமனத்தின் தன்மையை முதல் நியமனக் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(ii) கீழ்க் குறிப்பிடப்படும் பாடநெறிகளைத் தெரிவு செய்பவர்கள் மேற்சொல்லப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும் :-

(அ) சிங்கள மொழிப் பயிற்சி நெறி.– க. பொ. த. (உ.த) பரீட்சையில் சிங்கள மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) *விஞ்ஞானப் பாடநெறி :*

(i) *பழைய பாடத்திட்டத்தின் பௌதீகவியல், தாவரவியல், உயிரியல், விலங்கியல், இரசாயனவியல், கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டிற்காவது க. பொ. த. (சா.த.) இல் திறமைச் சித்தி அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் ஒன்றிற்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல். (உயிரியல், விலங்கியலோடு அல்லது தாவரவியலோடு கணிக்கப்பட மாட்டாது.) அல்லது*

(ii) *புதிய பாடத்திட்டத்தின் க. பொ. த (சா.த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருத்தலும், விஞ்ஞானத்தில் சிறப்புச் சித்தி பெற்றிருத்தலும் : அல்லது*

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் இரண்டில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(இ) *கணிதப் பாடநெறி :*

(i) *பழைய பாடத்திட்டத்தின் பௌதீகவியல், பிரயோக கணிதம், தூய கணிதம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் குறைந்தபட்சம் இரண்டிலாவது க. பொ. த. (சா.த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் ; அல்லது*

(ii) *புதிய பாடத்திட்டத்தின் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம்,விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருத்தலோடு, கணித பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது*

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுள் இரண்டு பாடங்களில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(ஈ) *விவசாயப் பாடநெறி :*

(i) *பழைய பாடத்திட்டத்தின் க. பொ. த. (சா.த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் விவசாயம், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது*

(ii) *புதிய பாடத்திட்டத்தில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் விவசாய விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது*

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விவசாயம், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iv) தே. க. பொ. சா. பரீட்சையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடத்திற்கு "ஏ" அல்லது "பீ" தேர்ச்சி பெற்றிருத்தல். (தொழில் முன்னிலைப் பாடமொன்றெனில் என்ன பாடமென்று அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு கடிதம் அவசியமாகும்.) ; அல்லது

(v) *அரசாங்க விவசாய பண்ணையொன்றில் 06 மாத காலங்களுக்குக் குறையாத பயிற்சியைப் பெற்றிருத்தல்.*

(உ) *மனையியற் பாடநெறி :*

(i) *க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் மனையியல், தையல் வேலை ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது*

(ii) *க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மனையியல் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது*

(iii) தே. க. பொ. சா. பரீட்சையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடத்திற்கு "ஏ" அல்லது "பீ" சித்தி பெற்றிருத்தல். (தொழில் முன்னிலைப் பாடமொன்றெனில் என்ன பாடமென்று அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு கடிதம் அவசியமாகும்.) ; அல்லது

(iv) *அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் ஓர் ஆண்டிற்குக் குறையாத மனையியற் பயிற்சியைப் பெற்றதற்கான சான்றிதழ்.*

(ஊ) *ஆங்கிலப் பாடநெறி :*

(i) *தற்போது ஆங்கில உதவி ஆசிரியர் நியமனம் பெற்றிருத்தல் ; அல்லது*

(ii) *ஆங்கிலம் i, ii, iii ஆந் தர ஆசிரிய தராதரப்பத்திரம் பெற்று தற்போது சேவையில் இருப்பதுடன்*

(iii) *க. பொ. த. (சா. த.) பரீட்சையில்/இலண்டன் சாதாரண தரப்பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது*

(iv) *அதனைவிட உயர் பரீட்சை ஒன்றில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.*

(எ) *சமய பாடநெறி :*

I. *புத்த சமயம், ரோமன் கத்தோலிக்க சமயம், இந்து சமயம், இஸ்லாம் சமயம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தாம் தொடர்வதற்கு எதிர்பார்க்கும் சமய பாடத்தில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது*

II. *தே. க. பொ. சா. பரீட்சையில் சமய பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் ;அல்லது*

III. மேலே *(1)* இல் குறிப்பிட்ட பாடத்தில் அல்லது அதனுடன் தொடர்புடைய பாடமொன்றில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் ;

(ஏ) *சித்திரப் பாடநெறி :*

(i) *அரச கவின் கலை நிறுவனத்தின் சான்றுப் பத்திரம் (சித்திரம் பற்றிய மூன்று வருட பயிற்சிநெறி) ; அல்லது*

(ii) *சித்திரக்கலை ஆசிரிய தராதரப் பத்திரம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்);அல்லது*

(iii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்திரப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iv) தே. க. பொ. சா. பரீட்சையில் சித்திரப் பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல். (அழகியற் கலைப் பாடம் எது என்பதை அதிபர் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.) ; அல்லது

(v) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்திரப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்;

(ஐ) *சங்கீதப் பாடநெறி :*

(i) இலங்கைக் 'காந்தர்வ' சபையின் சங்கீதம் பற்றிய இறுதி / மத்திம சான்றுப்பத்திரம் அல்லது கீழைத்தேய சங்கீதப் பரீட்சையில் அல்லது தேசிய சங்கீதப் பரீட்சையில் அல்லது தேசிய சங்கீதப் பரீட்சையின் ஆரம்பப் பரீட்சை ; அல்லது

(ii) அரசாங்க சங்கீதக் கல்லூரியின் இடைநிலைச் சான்றுப்பத்திரம் ; அல்லது

(iii) வட இலங்கை கீழைத்தேய சங்கீத ஆசிரிய சங்கத்தின் சங்கீத சான்றிதழ் (5 ஆம் வகுப்பு) ; அல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்ட இந்திய சங்கீத நிறுவனமொன்றில் சங்கீதம் பற்றிய இடைமாணித் தராதரப் பத்திரம் ; அல்லது

(v) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(vi) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சங்கீத பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(vii) தே. க. பொ. சா. பரீட்சையில் சங்கீத பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் (அழகியற் கல்விப் பாடம் எது என்பதை அதிபர் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

(ஒ) *நடனப் பாடநெறி :*

(i) இலங்கைக் காந்தர்வ சபையின் நடனம் பற்றிய இறுதி / மத்திம சான்றுப்பத்திரம் அல்லது கீழைத்தேய நடனப் பரீட்சையில் அல்லது தேசிய நடனப் பரீட்சையின் முதலாம் பரீட்சையில் ; அல்லது

(ii) அரசாங்க நடனக் கல்லூரியின் இடைநிலைச் சான்றுப்பத்திரம் ; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட இந்திய நடன நிறுவனமொன்றில் நடனம் பற்றிய இடைமாணித் தராதரப்பத்திரம் ; அல்லது

(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் நடன பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(v) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் நடன பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(vi) தே. க. பொ. சா. பரீட்சையில் நடன பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் (அழகியற் கல்விப் பாடம் எது என்பதை அதிபரினால் உறுதிப் படுத்தப்பட்ட கடிதம் அவசியம்.)

(ஓ) *அரபுப் பாடநெறி :*

(i) பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அல்-ஆலிம் ஆரம்பப் பரீட்சையின் i ஆம் ii ஆம் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அரபுப் பாடத்தில் சித்திபெற்றிருத்தல் : அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட 'மத்ரஸா' நிறுவனமொன்றின் இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

இதற்கான அங்கீகரிக்கப்பட்ட மத்ரஸாக்கள் வருமாறு.

(1) பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரி, கோட்டை, காலி
(2) கபூரிய்யா அரபுக் கல்லூரி, மகரகம
(3) மத்ரஸதுல் பாரி அரபுக் கல்லூரி, வெலிகம
(4) காசிமிய்யா அரபுக் கல்லூரி, புத்தளம்
(5) நத்வத்துல் உலமா அரபுக் கல்லூரி, மூதூர்
(6) கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி, அட்டாளைச் சேனை
(7) மத்ரஸதுல் பலாஹ் அரபுக் கல்லூரி, காத்தான் குடி
(8) முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கல்-எலிய
(9) மத்ரஸதுல் ஜிப்ரிய்யா அரபுக் கல்லூரி, காலி
(10) ஹியாதியா அரபுக் கல்லூரி, மாதம்பை
(11) நத்வத்துல் புஹாரி அரபுக் கல்லூரி, கிண்ணியா
(12) மத்ரஸதுல்நூராணியா அரபுக் கல்லூரி, கொட்டுவகொட, மாத்தறை
(13) மக்கியா அரபுக் கல்லூரி, காலி

அல்லது

வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (நேர்முகப் பரீட்சையின் போது அந்த நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென்று சான்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

(iii) மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்போர் வேறு நியமனம் பெற்றிருப்பினும் அரபுப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஔ) *விசேட கல்விப் பாடநெறி :*

இப்பயிற்சி நெறி மூன்று பிரிவுகளைக் கொண்டது :

1. கட்புலன் குறைந்த (பார்வை) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்
2. செவிப்புலன்குறைந்த (கேள்வி) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்

3. உளவாற்றல் குறைந்த (நுண்ணறிவு குறைவு) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்
தாம் விரும்பிய பிரிவு எது என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். தெரிவின்போது ஆங்கிலத்தில் தேர்ச்சி உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(க) கைப்பணி தொழில்நுட்பத்திறன் பயிற்சி நெறி :

(i) க. பொ. த. (சா.த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் ;

- மரவேலை
- உலோக வேலை
- நெசவு
- மட்பாண்டம்
- மோட்டார் தொழில்நுட்பம்
- வானொலி தொழில்நுட்பம்
- மேசன் வேலை

ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(ii) தே. க. பொ. சா. சான்றிதழ் பரீட்சையில் குறிப்பிட்ட பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் (தொழில் முன்னிலைப் பாடம் எது என்பதை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் அவசியம்.) ; அல்லது

(iii) அரச தொழில்நுட்பப் பாடசாலையொன்றில் அல்லது அரச திணைக்களமொன்றின் கீழ் நடத்தப்படும் ஒரு வருடத்துக்குக் குறையாத பயிற்சி நெறியொன்றை திருப்திகரமாகப் பூர்த்தி செய்து பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

(கா) வர்த்தகப் பாடநெறி :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் பொருளியல், வர்த்தகம், கணக்கியல், தட்டச்சு, சுருக்கெழுத்து, வர்த்தகமும் நிதியும் ஆகியவைகளில் இரண்டு பாடங்களில் திறமைச்சித்திகள் பெற்றிருத்தல், அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மேற்குறித்த பாடங்கள் இரண்டில் சித்தியடைந்திருத்தல் ; அல்லது

(iii) அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் ஒரு வருட வர்த்தகப் பாடநெறியில் சித்தியடைந்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

(கி) தமிழ் மொழிப் பாட நெறி :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

(கீ) உடற் கல்விப் பாடநெறி :

(i) தற்போது உடற் கல்விப் பாட ஆசிரியராக நியமனம் பெற்றிருத்தல்

(கு) சமூகவியல் பாடநெறி :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சமூகக்கல்வி பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல், அல்லது

(ii) தே. க. பொ. சா. பரீட்சையில் சமூகக்கல்வி பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் புவியியல், வரலாறு, பொருளியல், அரசியல் ஆகிய பாடங்களில் ஆகக்குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

(கூ) இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) :

பந்தி 7 (1) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்ற இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடநெறிக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்கள் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

8. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலையொன்றில் அனுமதிக்கப்பட்ட ஆசிரிய குழுவொன்றில் நிரந்தர ஆசிரியராகக் கடமையாற்றும் சாதாரண வகுப்புகளில் வாரத்தில் 20 மணித்தியாலங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து குறிப்பிட்ட ஒரு தொகையினர் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இது தொடர்பாகக் கீழ்க் குறிப்பிடப்படும் பாடசாலைகள் தனியார் பாடசாலைகளாகக் கொள்ளப்படும்.

(i) 1951 ஆம் வருடம் கட்டணம் அறவிடும் பாடசாலைகளாக மதிக்கப்பட்ட உதவிபெறும் பாடசாலைகள்.

(ii) 1960.12.01 ஆந் திகதி கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளென தீர்மானிக்கப்பட்ட பாடசாலைகள்.

(iii) கல்வி அமைச்சினால் (பிரதேச / மாகாணக் கல்விப் பணிப்பாளர்களால் அல்ல) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளும் பிரிவேனாக்களும்.

சகல தனியார் பாடசாலைகளிலும் கடமையாற்றும் விண்ணப்ப தாரிகள் 2014.11.28 ஆந் திகதியன்று குறைந்த பட்சம் ஒருவருட காலம் இடைவிடாது சேவையாற்றியிருத்தல் வேண்டும். அவர்களது முதல் நியமனக் கடிதமும், குறிப்பிட்ட ஆசிரியர் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் குழுவில் உள்ளவர் என்பதையும் அத்தாட்சிப்படுத்திய ஒரு கடிதமும் உரிய மாகாண / வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்று நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரிவெனாக்களிலிருந்து விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் 2014.11.28 ஆந் திகதியன்று ஆகக் குறைந்தது இரண்டு வருடச் சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். 1959 பிரிவெனாச் சட்டம் அல்லது 1979 ஆம் வருட 64 ஆம் இலக்க சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப் பட்ட சேவை இதற்காகக் கணக்கிடப்படும்.

தற்போது பிரிவெனாக்களில் கற்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிங்களம், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், பௌத்த சமயம் ஆகிய பாடநெறிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்கலாம். (நியமனம் பெற்ற பாடத்திற்கே பயிற்சி பெறல் வேண்டும்). 'வித்யாயதன'

பிரிவெனாக்களில் கற்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் இதற்கு மேலதிகமாக சங்கீதம், சித்திரம், நடனம், வர்த்தகம், உடற்கல்வி, விவசாயம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

சகல அரச அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலை ஆசிரியர்கள் முகாமையாளர்களிடமிருந்தும், பிரிவெனா ஆசிரியர்கள் நிருவாகிகளிடமிருந்தும் பின்வரும் விடயங்கள் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட சான்றிதழை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) பயிற்சிபெறும் காலத்தில் சேவையிலிருந்து ஆசிரியரை விடுவிக்க முடியும் என்பது பற்றியும்,

(ii) பயிற்சிக் காலத்தின் போது ஆசிரியருக்குச் சம்பளம் வழங்க முடியும் என்பது பற்றியும்,

(iii) பயிற்சி முடிவில் ஆசிரிய நிருவாக சபையினால் குறிப்பிட்ட ஆசிரியரை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ள முடியும் என்பது பற்றியும்,

(iv) பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படும் பிரிவெனா ஆசிரியரிகளுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்கள் கோரப்படுவதில்லை என்பது பற்றியும் அவரது வேலைகளை அனுமதிக்கப்பட்ட ஆசிரிய குழுவினருக்கிடையில் பகிர்ந்து கொடுப்பதாகவும் குறிப்பிடுதல்.

அரச அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் இருந்தும், பிரிவெனாக்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் பயிற்சிக்காகப் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு "பயிற்சியின் பின்பு அரசாங்க பாடசாலைகளில் தொழில் கோருவதில்லை"என்ற நிபந்தனைப் பத்திரத்தில் ஒப்பமிட வேண்டும்.

அரச அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலிருந்து தோற்றும் சகல ஆசிரியர்களும் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் கையொப்பமிடப்பட்ட முதல் நியமனக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். 18 வயதுக்கு முன் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நியமனத் திகதி அவர்களுக்கு 18 வருடம் பூர்த்தியான தினத்திலிருந்தே கணிக்கப்படும். இந்நியமனக் கடிதம் வேறொரு அதிகாரியினால் கையொப்பமிடப்பட்டிருப்பின் அது உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

9. **தெரிவுக்காக விண்ணப்பித்தல் :**

(i) இந்த வர்த்தமானி அறிக்கையில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரியால் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து அதன் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும் :

(அ) பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியிலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் 8" X 12" (A4) அளவிலான தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) எந்தக் கூட்டினையும் மாற்றவோ நீக்கவோ முயற்சிக்கக் கூடாது. கோடுகளுக்கிடையில் இடைவெளி இருத்தல் வேண்டும். ஒன்றோடொன்று இணைந்திருக்கும் விதத்தில் தயாரித்தல் கூடாது.

(ii) விண்ணப்பதாரரால் விண்ணப்பப்படிவம் குறைவின்றியும் சரியாகவும் பூர்த்தி செய்யப்படவேண்டும். பூரணமற்ற விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கீழ்க் குறிப்பிடப்படும் அம்சங்களின்பால் விண்ணப்பதாரிகளின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(அ) சகல விண்ணப்பதாரிகளும் தமது பெயரைத் திணைக் களத்தில் பதிவு செய்துள்ள பிரகாரமே குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) தமது பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப் பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். பாடசாலை அதிபர் ஒருவர் விண்ணப்பிப்பதாயிருந்தால் கோட்ட/வலயக் கல்விக் காரியாலய கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(இ) வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழ்வரும் மாதிரிக்கேற்ப தயாரிக்கப்பட்ட கடிதவுறைகளில் இட்டு அதன் இடது மேல் மூலையில் ''ஆசிரியர் கல்லூரி களில் ஆசிரியர் கல்விப் பாடநெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்-2015/2016'' எனக் குறிப்பிட்டு பயிற்சிநெறி, மொழி மூலம் மாவட்டம் என்பனவற்றை யும் குறிப்பிட்டு 2014.12.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் ''கல்வி பணிப் பாளர், ஆசிரியர் கல்வி நிர்வாக கிளை, கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்லை'' எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

பதிவஞ்சல்

"ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர்
கல்விப் பாடநெறியைப் பின்பற்றுவதற்காக
ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2015/2016"

பாடநெறி : ..............
மொழிமூலம் : ..............
பாடசாலையின் வலயம் : ..............

கல்விப் பணிப்பாளர்,
ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவு,
கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.

(ஈ) தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன்,

(i) விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

(ii) விண்ணப்பத்தோடு ஆவணங்கள் எவற்றையும் இணைத்து அனுப்புதல் கூடாது.

(iii) தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நடைபெறும் நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ் களினதும் மூலப் பிரதிகளும், போட்டோ பிரதிகளும் சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். போட்டோப் பிரதிகள் யாவும் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

(உ) "ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப்பாடநெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்-2015/2016" இப்பயிற்சி நெறி தொலைக்கல்வி மூலமோ வார இறுதி பயிற்சி மூலமோ நடைபெற மாட்டாது.

10. வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலமான வெளிப்படுத்தல்களில் ஏதாவது தொடர் பின்மை தெரியவரும் பட்சத்தில் சிங்கள மொழி வெளிப்படுத்துகையே அதிகாரபூர்வமானதாயிருக்கும்.

அனுர திசாநாயக்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை,
2014, நவெம்பர் 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

*ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரிய கல்விப் பாடநெறியைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2015/2016*

1. மொழி மூலம் : ☐

2. முதல் நியமனக் கடிதத்திற்கமைவாக பாடசாலையில் கடமையேற்ற திகதி : ☐

3. பாடநெறி : ☐

4. முதல் நியமனத்தின் தன்மை, பாடம் அத்துடன் உங்களுக்கு உரித்தான சேவை/தரம்

(அ) முதல் நியமனத்தின் தன்மை : ☐

(ஆ) பாடம் : ☐

(இ) உரித்தான சேவை :

இலங்கை ஆசிரியர் சேவை - 01
ஆசிரிய உதவியாளர் - 02
வேறு (குறிப்பிடவும்) - 03 ☐ ☐
(உரிய இலக்கத்தை எதிரே உள்ள கூட்டில் குறிப்பிடவும்) :

(ஈ) தரம் : ☐

5. நீங்கள் தொலைக்கல்வி அல்லது வார இறுதி ஆசிரியர் பயிற்சி பாடநெறியில் பயிற்சி பெற்றும் அதனைப் பூர்த்தி செய்யவில்லை யாயின் மட்டும் பின்வரும் விபரங்களைச் சமர்ப்பிக்கவும்;

(i) பாடநெறி :....................................................................
(ii) வருடம் :....................................................................
(iii) இறுதிப் பரீட்சையின் பெறுபேறு :................................ ....................................

6. பெயர் முதலெழுத்துக்களுடன் (ஆங்கில பெரிய எழுத்தில், கடைசிப் பெயர் முன்பாகவும் முதலெழுத்து கடைசியாகவும் எழுதவும் உ-ம் : PERERA, A. B.) : வண./திரு./திருமதி/செல்வி ....................................................................................

7. உபயோகிக்கும் முறைப்படி முதலெழுத்துக்குரிய பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : வண./திரு./திருமதி/செல்வி ............................ ....................................................................................

8. பால் : ☐
ஆண் - 1, பெண் - 2
(பொருத்தமான இலக்கத்தை எதிரிலுள்ள சதுரத்தில் எழுதுக.)

9. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐

10. (அ) பிறந்த திகதி :...............
(ஆ) 2014.11.28 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :............ மாதங்கள் :............ நாட்கள் :............

11. தொலைபேசி இல :
வதிவிட :.............................. நடமாடும் :..............................

12. மின்-அஞ்சல் (இருப்பின்) :........................................................

13. பிரத்தியேக முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்)
....................................................................................
....................................................................................
....................................................................................
....................................................................................

14. தற்போதைய சேவை நிலையம், முகவரி, மாவட்டம் மற்றும் வலயக் கல்விக் காரியாலயம் (ஆங்கில பெரிய எழுத்தில்) :

(i) தற்போதைய சேவை நிலையம் :......................................
(ii) முகவரி :....................................................................
(iii) மாவட்டம் :....................................................................
(iv) வலயக் கல்விக் காரியாலயம் :......................................
(v) சேவை நிலையத்தின் தன்மை (பொருத்தமான இலக்கத்தை எதிரிலுள்ள சதுரத்தில் எழுதுக.) ☐

(அ) அரசாங்கப் பாடசாலை - 01
(ஆ) பெருந்தோட்டப் பாடசாலை - 02
(இ) அரசாங்க அனுமதிபெற்ற பிரிவெனா - 03
(ஈ) அரசாங்க அனுமதிபெற்ற தனியார் பாடசாலை - 04
(உ) வேறு நிலையம் - 05

15. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :

| | | முதலாம் முறை | இரண்டாம் முறை |
|---|---|---|---|
| | வருடம் | | |
| | சுட்டிலக்கம் | | |
| இலக்கம் | பாடங்கள் | பெற்றுள்ள தரங்கள் | |
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள்

| | | முதலாம் முறை | இரண்டாம் முறை |
|---|---|---|---|
| | வருடம் | | |
| | சுட்டிலக்கம் | | |
| இலக்கம் | பாடங்கள் | பெற்றுள்ள தரங்கள் | |
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

16. சேவை விவரங்கள் :

| இலக்கம் | சேவையாற்றிய பாடசாலை | சேவைக் காலம் | கஷ்ட பிரதேசமா / இல்லையா என்ற விவரம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

17. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(i) மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானதும் பிழையற்றதெனவும் உறுதிமொழிகின்றேன். என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையெனக் கண்டுபிடிக்கப் படுமிடத்து பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்பட மாட்டேன் எனவும், தெரிவுசெய்யப்பட்ட பின், வழங்கப்பட்ட தகவல்கள் பிழையென வெளிப்படும் பட்சத்தில் பாடநெறியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

(ii) தற்போது எந்தவொரு நிறுவனசார் ஆசிரியர் பயிற்சியிலும் நான் பங்குபற்றுவதில்லை என வெளிப்படுத்துகிறேன்.

................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :................................

18. **அதிபரின் குறிப்புரை :**

(i) தற்போது ஆசிரியர் குழுவிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை :................................
(ii) மாணவ எண்ணிக்கை :................................
(iii) விண்ணப்பதாரர் பயிற்சிக்காக விடுவிக்கப்படின் மாணவ எண்ணிக்கைப்படி பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதா ? :................................

மேற்படி விண்ணப்பதாரி எனது பாடசாலையில் .................. ............................................ ஆந் திகதி முதல் ஆசிரியராக/ஆசிரிய உதவியாளராக சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பதாரியால் மேலே வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் சரியானவை எனவும் சான்றுபடுத்துகிறேன்.

ஆசிரிய பயிற்சிக்காக வண./திரு./திருமதி/செல்வி ................. .......................... தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க இணக்கம் தெரிவிக்கின்றேன்.

................................,
அதிபரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :................................

19. வண./திரு./திருமதி/செல்வி ...................................... ; .................................................... வலயத்திலுள்ள ...................................... பாடசாலையில் ஆசிரியர் சேவையில்/ஆசிரிய உதவியாளராக சேவையிலுள்ளார் எனவும் ; அவர் .............................................................. ஆந் திகதியிடப்பட்ட முதல் நியமனத்திற்கமைய ...................... ...................................... ஆந் திகதி கடமையேற்றுள்ளார் என்பதையும், ............................ திகதி முதல் இதுவரை இப்பாடசாலையில் சேவையாற்றுகின்றார் எனவும் இவ்விண்ணப் பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னால் பரீட்சிக்கப் பட்டனவென்றும், அவை உண்மையானவை என்றும் சான்றுப் படுத்துகிறேன்.

ஆசிரிய பயிற்சிக்காக வண./திரு./திருமதி./செல்வி ............... தெரிவு செய்யப்பட்டால் அதற்காக விடுவிக்க இணக்கம் தெரிவிக்கிறேன்.

................................,
வலயக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :................................

20. வண./திரு./திருமதி./செல்வி ...................................... .................................................... வலயத்திலுள்ள ................................................ பாடசாலையில் ஆசிரியர் சேவையில்/ஆசிரிய உதவியாளராக சேவையிலுள்ளார் எனவும் இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னால் பரீட்சிக்கப்பட்டனவென்றும், அவை உண்மையானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

ஆசிரிய பயிற்சிக்காக வண./திரு./திருமதி/செல்வி ................. தெரிவு செய்யப்பட்டால் அதற்காக விடுவிக்க இணக்கம் தெரிவிக்கிறேன் ......................

................................,
மாகாணக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :................................

11-914

---

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

**களம்சார்/அலுவலகம்சார் உத்தியோகத்தர் - வகுதி I சேவைத் தொகுதியின் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2014**

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் களம்சார்/அலுவலகம்சார் உத்தியோகத்தர் - வகுதி I சேவைத் தொகுதியின் மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவியின் 21 வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- எழுத்துப் பரீட்சை ஒன்றினதும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். முதலில் எழுத்துப் பரீட்சை ஒன்று நடத்தப்படுவதோடு, எழுத்துப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைகின்ற விண்ணப்பதாரிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையின் இரு மடங்கினர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் மற்றும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப, திறமை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு உரிய பதவியில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

எழுத்துப் பரீட்சை :

| வினாப் பத்திரம் | | நேரம் | மொத்தப் புள்ளி | சித்தி அடைய வேண்டிய புள்ளி | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | பொது அறிவு | 1 1/2 மணித்தியாலம் | 100% | 40% | சமகால சமூக நிகழ்வுகள் தொடர்பான அறிவு மற்றும் சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு மற்றும் ஆக்க சிந்தனைத் திறன், சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் ஆற்றல் என்பவற்றைக் கணிப்பிடுவதற்கான சுருக்க வினாப்பத்திரம் ஒன்று |
| 2 | மதிநுட்பத்தை பரீட்சித்தல் | 1 மணித்தியாலம் | 100% | 40% | உரைநடை மற்றும் எண்ணியல்சார் அடையாளப் பின்னணிகளைக் கொண்ட ஓர் அமைப்பில் வழங்கப்படும் சிக்கல்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகளின் தீர்மானங்களையும், பதிலளிப்புக்களையும் மதிப்பீடு செய்வதன் மூலம் விவேகம் மற்றும் விளங்கிக்கொள்ளும் திறன் குறித்து விண்ணப்பதாரியின் இயலுமையை பரீட்சிப்பதற்கான சுருக்க வினாப்பத்திரம் ஒன்று. |

2. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | அதிகூடிய புள்ளித்தொகை |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. அனுபவம் | 30 |
| 3. மொழித் தேர்ச்சி | 20 |
| 4. கணினித் திறன் | 20 |
| 5. நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

2. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞான அல்லது வணிகத்துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் டிப்ளோமா ஒன்றைக் கொண்டிருத்தல்.

3. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. **சம்பள அளவுத் திட்டம்**.- இந்தப் பதவிக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (IV) இற்கு இணங்க, சம்பளக் குறியீட்டு இலக்கம் MN-6-2006 (A) சம்பள அளவுத் திட்டம் : ரூபா 17,680 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - ரூபா 31,645 ஆகும்.

5. மேற்குறிப்பிட்ட பதவிக்காக விண்ணப்பிக்கும் சகலரும் சிறந்த இயல்பையும், இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றக்கூடிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் கொண்ட இலங்கைப் பிரசையாக இருத்தல்

வேண்டும். பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்** :

(i) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி, இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்திசெய்து, "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்ப கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு 2014.12.29 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு, நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கிக் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் கழன்று விடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும், பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(v) அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர்/பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர்/சமாதான நீதவான் ஒருவர்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர்/2,40,360 ரூபாவை அல்லது அதற்கு அதிகமான தொகையினை வருடாந்த திரட்டிய சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது பிரதம மதகுரு அல்லது ஏனைய மத வழிபாட்டு இடங்களின் பொறுப்பு வாய்ந்த மதகுரு ஒருவர் மூலம் விண்ணப்பதாரியின் கையொப்பமானது உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை அவர்களது திணைக்களத்தின் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(vii) விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை என ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவரின் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான தகவல்கள் போலியானவை என ஆட்சேர்ப்புக்கு பின்னர் கண்டறியப்பட்டால் சேவையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(viii) திணைக்களத்திலுள்ள எந்தவொரு நபரின் பெயரிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக் கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாக கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. அதேவேளை, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரப்பட மாட்டாது.

7. அரச கரும மொழி அல்லாத வேறு மொழிமூலத்தில் சேவையில் இணையும் உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்தினுள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இற்கு இணங்க மற்றும் அதற்கு இயைபான சுற்றிக்கைகளுக்கும் ஏற்ப உரிய மட்ட ஏனைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

8. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்தைக் கொண்டதுமாகும். விதவை/தபுதாரர்/அனாதை ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தா செலுத்துதல் வேண்டும்.

(ii) குறிப்பிடப்படுகின்றவாறு இந்தத் திணைக்களத்திற்கு உரித்தான எந்தவொரு தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேவையாற்றுவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள், மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவிக்கு உரித்தான அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட ஏற்பாடுகளுக்கும் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் நிதிப்பிரமாணங்களுக்கும் 1589/30 எனும் இலக்கத்தையும் 2009.02.20 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானியில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட நடபடி முறையில் உள்ள பொது நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கம் அல்லது பொறுப்பான அமைச்சின் அல்லது தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மூலம் வெளியிடப்படும் சட்டம் மற்றும் விதிகளுக்கும் உட்பட்டு நடத்தல் வேண்டும்.

9. **பரீட்சை ஒழுங்குவிதிகள் :**

(i) ஒழுங்கான முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் சார்பாக பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பணிப்பாளரினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ எந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு,

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பவை மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது, ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழி மூலங்களில் நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(v) விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்ப இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர். எழுத்துப் பரீட்சையில் தோற்றுவதானது தகைமைகளைப் பூரணப்படுத்தி இருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இப்பரீட்சையானது தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

10. வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் பூர்த்திசெய்வதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

ஜே. ஏ. ரஞ்சித்,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்.

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு 10,
2014, நவெம்பர் 28.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்**

*களம்சார்/அலுவலகம்சார் உத்தியோகத்தர் - வகுதி I சேவைத் தொகுதியின் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2014*

(அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பிக்கும் மொழி மூலம் :

1. விண்ணப்பதாரியின் பெயர் :-

   (i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

   (iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) (திரு./திருமதி/செல்வி) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :-

   (i) (அ) அலுவலக முகவரி (ஆங்கிலத்தில்) :----.
   (ஆ) அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
   (இ) அலுவலக தொலைபேசி இலக்கம் :----.

   (ii) (அ) தனிப்பட்ட முகவரி (ஆங்கிலத்தில்) :----.
   (ஆ) தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்)
   (இ) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :----.

3. பிறந்த திகதி :-

   ஆண்டு :---- மாதம் :---- திகதி :----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

   வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :----.
   (திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன)

8. கல்வித் தகைமைகள் :

| பட்டத்தின் பெயர் மற்றும் பட்டப்பின் டிப்ளோமாவின் பெயர் | செல்லுபடியாகும் திகதி | பிரதான பாடங்கள் | பெறுபேறு | பல்கலைக்கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

9. ஏனைய கல்வி/மொழித் தேர்ச்சி/கணினித் திறன் தொடர்பான தகைமைகள் (இருப்பின்) :

| பரீட்சை/டிப்ளோமா பாடநெறி | பூர்த்திசெய்த ஆண்டு | நிறுவனத்தின்/பல்கலைக்கழகத்தின் பெயர் |
|---|---|---|
| | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் (இருப்பின்) :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரசாங்கத் துறை/இடைநிலை அரசாங்கத் துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

11. நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா ?/பதிவுசெய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடவும். (பதிவுசெய்ததன் மூலம் எனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

12. நீர் அரசாங்க சேவை ஒன்றிலிருந்து நீக்கப்பட்டவரா ? :----.

13. தற்போது அரசாங்க சேவையில் இருப்பின் உமக்கு எதிராக திணைக்களத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் ஏதேனும் உள்ளனவா ? :----.

14. நீர் ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின் விபரங்களைக் குறிப்பிடவும் :----.

15. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :----.
பணம் செலுத்திய திகதி :----.

| பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டி அனுப்பப்படல் வேண்டும். |
|---|

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கின்றக திரு./திருமதி/செல்வி ............................................................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் .................................. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(இப்பகுதியானது அரசாங்கத் தொழிலில் உள்ளவர்களுக்கு மட்டும்).

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./திருமதி/செல்வி ................................................ அவர்கள், ...................................................................... எனும் பதவியில் தற்போது பணியாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து இவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

11-927

---

**பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

*இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014*

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து (கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான பதவிகளின் எண்ணிக்கை | - 05 |
| தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) | - 04 |
| தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) | - 01 |

1. **சேவை நிபந்தனைகள்**.- அரச சேவைகள் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள் மற்றும் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் :-

1.1 தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவை செய்யும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும்.

1.2 நியமனம் மூன்று (3) வருட தகுதிகாண் கடமை நிலைக்கு உட்பட்டதாகும். தற்பொழுது அரச சேவையின் பதவியில் நிரந்தரமாக்கப் பட்ட அலுவலர் நியமிக்கப்பட்டால் அவர் ஒரு வருட பரிசீலனைக் கால எல்லையின்கீழ் மேற்கொள்ளப்படும்.

1.3 நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு நியமனத் திகதி முதல் மூன்றாவது வேதன நிலைக்கு வருவதற்கு முன்னர் முதலாவது தகுதிகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

1.4 பதவியில் அமர்த்தப்பட்ட பின்னர் 5 வருடத்துக்குள் 2007.05.28 ஆந் திகதிய பொது நிர்வாக 07/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய இரண்டாம் மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

1.5 நியமனம் கிடைத்த அலுவலர் அரச சேவைகள் ஆணைக்குழுவின் நிபந்தனைகளுக்கும், நிறுவனக் கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும், காலத்துக்கு காலம் அரசினால் வழங்கப்படும் திருத்தங்களுக்கும் ஏனைய சட்டமுறையான கட்டளைகள், அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

2. **சம்பளத் தொகுதியும் அளவுத் திட்டமும்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (IV) இற்கு அமைய சம்பள குறியீட்டு இல. MN-3-2006A ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 ரூபா 27,885 அளவு மாதாந்த சம்பளத்துக்கு உரித்துடையதாகும்.

3. **வயதெல்லை** :-

3.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். தற்பொழுது அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

3.2 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

3.3 நற்பண்புகளையும் சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

4. **கல்வித் தகைமை** :

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதம்/ விஞ்ஞானம்/ தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களின்கீழ் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் (பழைய பாடவிதானத்தின்கீழ்) மூன்று பாடங்களில் ஒரே தடவையில் பெற்றிருத்தல்) ;

(இ) கடமை புரியும் பாடத்துறைக்கு உரியதான எக்ஸல் (Excel) மற்றும் Auto CAD பயன்பாடு சம்பந்தமாக மூன்றாந்தர மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறியை வெற்றிகரமாக நிறைவேற்றி இருப்பது விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

5. **தொழில் தகைமை.**- தொழில்நுட்ப உதவியாளர் (சிவில் மற்றும் இயந்திரவியல்) :

(i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய தொழில் பயிலுனர் மற்றும் தொழில்நுட்பவியல் பயிற்சி வழங்கும் அதிகாரசபை (NAITA) மூலம் வழங்கப்பட்ட பொறியியல் தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் அமைச்சினால் வழங்கப்பட்ட தேசிய உயர் பொறியியல் தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை வெற்றிகரமாக நிறைவுசெய்திருத்தல் ;

அல்லது

(vi) தொழில் துறைக்கு ஏற்றதான தேசிய தொழில் தகைமை (NVQ) 6 ஆவது மட்ட தகைமையை நிறைவுசெய்திருத்தல் ;

அல்லது

(vii) மேற்குறித்த தகைமைகளுக்குச் சமமான இலங்கை தொழில்நுட்ப சேவை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தகைமைகள்.

மேற்குறித்த தகைமைகள் இதனுடன் தொடர்புபட்ட பதவிக்கு உரிய துறைகளாக இருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை.**- அடிப்படைத் தகைமைகளை நிறைவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் பொதுப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

பொதுப் போட்டிப் பரீட்சையில் குறிப்பிடப்படும் சகல வினாத்தாள்களுக்கும் 40% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு விண்ணப்பதாரியினால் பெற்றுக் கொள்ளப்படும் ஆகக்கூடிய புள்ளிகளின் அடிப்படையில் தொடர் வரிசைக் கிரமத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

7. பரீட்சை :

7.1 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மும்மொழியில் நடாத்தப்படும்.

7.2 அபேட்சகர் தாம் விரும்பும் ஏதேனும் ஒரு மொழியில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றலாம். அத்துடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் பரீட்சையில் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

7.3 பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும்.

இந்தப் பணம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவப் பணிப்பாளரின் பெயருக்கு பெறப்பட்டு மாளிகாவத்தை தபால் அலுவலகத்தில் பணம் மாற்றக்கூடிய வகையில் காசுக் கட்டளை ஒன்று விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். (அதனை ஒட்டுதல் ஆகாது) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

7.4 பாடவிதானம் (வினாப்பத்திரம் இரண்டிலும் சித்தியடைதல் வேண்டும்) :

(1) நுண்ணறிவுப் பரீட்சை (காலம் : 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்)
(2) பொது அறிவுப் பரீட்சை (காலம் : 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்)

7.5 2015, பெப்புருவரி மாதத்தில் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ பணிப்பாளரினால் இத்திணைக்களத்தில் இப்பரீட்சை நடாத்தப்படும்.

7.6 பாடவிதானம் :

(1) நுண்ணறிவுப் பரீட்சை (காலம் : 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்)

* வாய்மூல, இலக்கத்தில், வரைபடம் அத்துடன் தர்க்க ரீதியான சிந்திக்கும் ஆற்றலை முன்வைத்து பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து தீர்மானம் எடுத்தல்.

(2) பொது அறிவு (காலம் : 1 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்)

* தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) :

(i) கரையோர வலயத்தை முகாமைத்துவம் செய்தல் :

* கரையோர வலயத்தை எதற்காக முகாமைத்துவம் செய்ய வேண்டும் ?
* அதனை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது ?

(ii) கடலரிப்பு மற்றும் அதற்கான காரணம்/ இயற்கை காரணம்/மனித நடவடிக்கையினால் கரையோர சூழலுக்கு ஏற்ற மரவகைகள்

(iii) கடலரிப்பின் தாக்கத்துக்கு உள்ளாகும் பிரதேசம், வருடாந்த கடலரிப்பு வேகம், துரித கடலரிப்பின் நிலையைக் கட்டுப்படுத்தும் முறை

* தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) :

(i) வரைதல் முறையைப் பயன்படுத்தி வரைபடத்திற்கு அமைய இயந்திரத்தின் அல்லது உதிரிப்பாகங்களுக்கு ஏற்படும் அல்லது முன்பின் பக்கம் எடுத்துக் காட்டும் வரைவு மற்றும் பௌதிகவியல், இயந்திரவியல் மற்றும் வர்த்தக கணிதம் ஆகிய பாடங்கள் சம்பந்தமாக விண்ணப்பதாரரின் அறிவைப் பரிசீலனை செய்வதற்காக இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது.

8. **விண்ணப்பிக்கும் முறை :**

8.1 இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிப் படிவத்துக்கு அமைய ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, முதல் பக்கத்தில் இல. 1 தொடக்கம் 5 வரையும், எஞ்சிய பகுதி அடுத்த பக்கத்தில் வரக்கூடியவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2014, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கும் பொருட்டு "பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், 4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கியிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல்" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**குறிப்பு**.- அரச சேவையில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பத்தை தத்தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2 குறித்த மாதிரிப்படிவத்துக்கு அமைய சகல விடயங்களையும் முழுமையாக, முறையாகப் பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் விண்ணப்பம் தபாலில் தொலைந்துவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்பன போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

8.3 விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. எனினும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் 7 தினங்களுக்கு முன்னர் பரீட்சைக்கு அழைப்புக் கடிதம் கிடைக்காவிடின் கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்களுடன் உடனடியாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு அறியத்தரவும் :-

(i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ;
(ii) முகவரி ;
(iii) விண்ணப்பம் தபாலில் அனுப்பிய திகதி, பதிவு இலக்கம், தபால் அலுவலகம்.

9. விண்ணப்பதாரரினால் கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களின் ஒளிப்படப் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்பு பதிவுச் சான்றிதழ் ;
(ii) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ் ;
(iii) தொழில் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்.

10. இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்படாத யாதேனும் விடயங்களில் பிரச்சினைகள் ஏற்படின் அது சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கே உரியதாகும்.

(பொறியியலாளர்) ஐ. எம். விக்ரமநாயக்க,
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவ திணைக்களம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
மாளிகாவத்தை,
2014, நவெம்பர் 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள
முகாமைத்துவ திணைக்களம்

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின்
தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை - 2014

(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(குறித்த இலக்கத்தைக் கோட்டுக்குள் குறிக்கவும்)

1. பெயர் :-

1.1 முதல் எழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியதாக பெயர் (ஆங்கிலத்தில் தனி எழுத்தில், உதாரணம் : SILVA, A.B.,), (திரு./திருமதி/செல்வி) :----.

1.2 முதல் எழுத்துக்களைக் குறிக்கும் பெயர் (தனித்தனி ஆங்கில எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (தமிழில்) :----.

2. முகவரி :-

2.1 நிரந்தர முகவரி :----.

2.2 உத்தியோக முகவரி :----.

2.3 தொலைபேசி இலக்கம் :
அலுவலகம் :----. சொந்த :----.

3. இலங்கைப் பிரசையா ? :----.

4. 4.1 பிறந்த திகதி :-

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

4.2 தேசிய அடையாள அட்டை இல. :

[ | | | | | | | | | ]

5. 5.1 ஆண்/பெண் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

5.2 சமூக அந்தஸ்து :

| | |
|---|---|
| விவாகமாகாதவர் | |
| விவாகமானவர் | |
| தாரமிழந்தவர் | |

6. கல்வித் தகைமை :

6.1 க. பொ. த. (சா. த.) :
வருடம் :----. பரீட்சை சுட்டிலக்கம் :----.

| பாடம் | பெற்ற சித்தி | பாடம் | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

6.2 க. பொ. த. (உ. த.) :
வருடம் :----. பரீட்சை சுட்டிலக்கம் :----.

| பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | |

7. தொழில்நுட்பத் தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | பாடநெறியில் தோற்றிய நிறுவனம் | பாடநெறியின் கால எல்லை | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3. | | | |

8. அனுபவம் :

| தொழில் அனுபவம் | நிறுவனம் | கால எல்லை |
|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | |

9. மொழித் திறன் சம்பந்தமான விபரம் :

| மொழி | வாசிப்பு | எழுதுதல் | கதைத்தல் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | |

10. கணினி பற்றிய அறிவு சம்பந்தமான விபரம் :

| சான்றிதழ் | சான்றிதழ் வழங்கிய நிறுவனத்தின் பெயர் | வருடம் | பாடம் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | | | |

11. பரீட்சைக் கட்டணம் அனுப்பிய தபால் அலுவலகத்தின் பெயர் :----.

தபால் கட்டளை இல. :----.

> அனைத்து பரீட்சைக்கான கட்டணம் 1,000 ரூபாவாகும். ஏதேனும் ஒரு தபால் அலுவலகத்தில் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ பணிப்பாளரின் பெயருக்கு செலுத்தப்பட்டு மாளிகாவத்தை தபால் அலுவலகத்தில் பணம் மாற்றக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலம் பிரதியை இதில் இணைத்தல் வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுதல் ஆகாது.)

12. இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானதும், சரியானதுமென இத்தால் உறுதி கூறுகிறேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் யாதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் தெரியவரின் நான் பதவிக்குத் தகுதியற்றவனாகக் கருதப்படுவதற்கும், நியமனத்தின் பின்னராயின் எவ்வித நட்டஈடும் இன்றி பதவி இழக்கச் செய்வதற்கும் ஆளாவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு மட்டும்.)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./திருமதி/செல்வி ........................................................... எனும் பெயருடைய அலுவலரினால் தரப்பட்டுள்ள விபரங்களை பரிசீலனை செய்து பார்த்தேன், அவ்விபரங்கள் யாவும் சரியானது எனவும், இவர் தெரிவுசெய்யப்படுமிடத்து தற்போது இவர் வகிக்கும் சேவையிலிருந்து விடுவிப்பு செய்ய முடியும்/முடியாது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை.

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

11-917

---

## காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

### காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் III ஆம் தர குடியேற்ற அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் தரம் III குடியேற்ற அலுவலர் பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கீழே பந்தி 2 இல் தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிட மிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இது சம்பந்த மான திறந்த போட்டிப் பரீட்சை 2014, டிசெம்பர் மாதம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்படும்.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் குடியேற்ற அலுவலர் தரம் 3 பதவியில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 70% இற்கு மேற்படாத எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் கீழே பந்தி 2 இல் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்து கொண்டுள்ள நபர்களை எழுத்துப் பரீட்சைக்கு மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி அதன் பெறுபேறுகளுக்கு ஏற்ப அரச சேவை ஆணைக்குழுவினால் தத்துவம் வழங்கப்பட்டுள்ள காணி ஆணையாளர் நாயகத்தினால் நிரப்பப்படும்.

2. **தகைமைகள் :**

(i) கல்வித் தகைமைகள்.- விலங்கியல், தாவரவியல், உயிரியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகியவை உள்ளிட்டு, விஞ்ஞான பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அத்துடன் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் வேறு ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில், கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் ;

(ii) *தொழில்சார் தகைமைகள்.-* மூன்றாம்நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற இரண்டு வருட விவசாய டிப்ளோமா பெற்றிருத்தல்.

3. **சம்பள அளவுத்திட்டம் மற்றும் பிரிவு.-** இந்தப் பதவிக்குரிய மாதாந்த திரட்டிய சம்பள அளவுத்திட்டம் - ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - 27,885. சம்பளக் குறியீட்டு இலக்கம் - MN-3-2006A.

4. **வயதெல்லை.-** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதை மிஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும்.

5. **தேகாரோக்கியம் மற்றும் ஏனைய சேவை நிபந்தனைகள் :**

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சிறந்த குணசுபாவம் மற்றும் நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) நாட்டில் எந்தப் பகுதியிலும் கடமை புரிவதற்குக் கட்டுப் பட்டவராக இருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவைப்பிரமாண விதிகளுக்கு ஏற்றவாறு விதித்துரைக்கப்பட்ட மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஈ) இந்தப் பதவித நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாக இருப்பதுடன் மூன்று வருடத்திற்கு தகுதிகூர் நிலைக்கு உட்பட்டு இருக்கும்.

6. **பரீட்சை முறை :**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும் ;

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தான் தகைமை பெற்றுள்ள பரீட்சையில் சித்தி அடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேலே, "தகைமை பெற்றுள்ள பரீட்சை" என்பது, 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளில் ஒன்றாகும் ;

(ii) பரீட்சார்த்தி ஒருவர், பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடைகள் எழுதுதல் வேண்டும் ;

(iii) தங்களுடைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கு விண்ணப்ப தாரர்களுக்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

7. **எழுத்துப் பரீட்சையின் பாட விதானம் :**

| வினாத்தாளின் பெயர் | பாட விதானம் |
|---|---|
| விவேகப் பரீட்சை | பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், தீர்மானங்கள் எடுக்கும் திறமை ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். |
| தொழில்நுட்ப வியல்சார் வினாத்தாள் | இலங்கையின் காணி ஆட்சி முறைமை மற்றும் அதன் வளர்ச்சி, இலங்கையின் காணி சீரமைப்புத் திட்டம், இலங்கையின் விவசாயப் பொருளாதாரம் மற்றும் குடியேற்றங்களைத் திட்டமிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் ஆகியவை சம்பந்தமாகக் கட்டமைப்பில் அமைந்த வினாத்தாள், கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகப் பரீட்சார்த்தி களிடமிருந்து சாதாரண தெளிவான விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது :<br><br>(i) இலங்கையில் காணி ஆட்சி முறைமை மற்றும் அதன் வளர்ச்சி :<br>- இலங்கையின் காணி ஆட்சி முறைமை பற்றிய வரலாறு<br>- ஆவணங்களைப் பதிவுசெய்தல் ஊடாக காணியின் உரிமையை உறுதி செய்தல்<br>- இலங்கையில் காணியின் உரிமையை பதிவுசெய்தல்<br><br>(ii) இலங்கையின் காணி சீரமைப்புத் திட்டம் :<br>- பிரித்தானியர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட தரிசு நிலக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் ஊடாக ஏற்பட்ட சமூக மாற்றங்கள்<br>- 1935 ஆம் வருடத்தில் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் தொடங்கிவைக்கப்படுதல் மற்றும் விவசாயிகளுக்கு காணிகளுக்கான உரிமைகளை வழங்குதல்<br>- 1972 இல் அறிமுகம் செய்யப்பட்ட காணிச் சீரமைப்பு ஆணைக் குழுச் சட்டம் மற்றும் அதன் ஊடாக ஏற்பட்ட காணிச் சீரமைப்பு<br><br>(iii) இலங்கையின் விவசாயப் பொருளாதாரம் :<br>- இலங்கையின் விவசாயமயக் கொள்கை<br>- இலங்கையின் முக்கியமான உணவுப் பயிர் உற்பத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பு |

| வினாத்தாளின் பெயர் | பாட விதானம் |
|---|---|
| | - காணி அபிவிருத்தி மற்றும் பாதுகாத்துக்கொள்ளுதல்<br>- இலங்கை நாட்டினுள் தேசிய உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு<br>- பயிர்களைப் பல்வகைப்படுத்துதல்<br>- நீர் தொடர்பான நிர்வாகம்<br>- மண் பாதுகாப்பு<br><br>(iv) குடியேற்றங்களைத் திட்டமிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் :<br>- குடியேற்றங்களைத் திட்டமிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான அடிப்படை விடயங்கள்<br>- சமூகப் பொருளாதார அளவீடு<br>- மீள் குடியேற்றம் செய்தல்<br>- சமூக அபிவிருத்தி<br>- அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் |

8. **நேர்முகப் பரீட்சை**.- எழுத்துப் பரீட்சையில் 40% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், விண்ணப்பதாரிகளின் அத்தாட்சிப்பத்திரங்கள் மற்றும் உடற்றகுதி குறித்துப் பரீட்சித்தல் மட்டுமே இடம்பெறும்.

9. **பரீட்சைக்கான நிபந்தனைகள் :**

(i) *பரீட்சைக் கட்டணம்*.- இதற்குரிய பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவாக இருப்பதுடன், இந்தப் பரீட்சைக் கட்டணத்தைக் காணி ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பான 2003-99-00 இற்கு வரவு வைக்கும் வண்ணம், விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதிக்கு முன்னதாக, நாட்டில் உள்ள வேண்டிய ஒரு பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்டச் செயலகத்தில் செலுத்துதல் வேண்டும். பிரதேச செயலகத்திடமிருந்து அல்லது மாவட்டச் செயலகத்திடமிருந்து விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை தங்களுடைய விண்ணப்பப் பத்திரத்தில் உரிய இடத்தில் கழன்று விடாதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தப் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம், எக்காரணத்தினாலும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீளச் செலுத்தப்பட மாட்டாது. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியைத் தம்மிடம் வைத்துக் கொள்ளுதல் நன்மை பயக்கும்.

(ii) *விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை :*

(அ) இந்த அறிவித்தலுக்கு இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2014, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "காணி ஆணையாளர் நாயகம், காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம், இல. 1200/6, மிஹிகத மெதுர, காணிச் செயலகம், ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல" எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குடியேற்ற அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014" எனத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பத்தை விண்ணப்பதாரர், பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ள மொழியில் நிரப்புதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அதிகாரம் பெற்றுள்ள ஆளொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் கையொப்பம், குறித்த திணைக்களத்தின் தலைவர் அல்லது அவர் சார்பாக செயற்படுவதற்குத் தத்துவம் வழங்கப்பட்டுள்ள அலுவலரைக் கொண்டும், ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பம், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர். சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரச அல்லது பணிப்பாளரின் நிர்வாகத்திலுள்ள பாடசாலையொன்றின் அதிபர் அல்லது வருடாந்த திரட்டிய சம்பளமாக 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேலதிகமாகச் சம்பளம் பெறுகின்ற அரச அலுவலர், பௌத்த விகாரை ஒன்றிற்குப் பொறுப்பாக உள்ள விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஒருவர், ஏனைய மத வழிபாட்டுத் தலமொன்றுக்குப் பொறுப்பாக உள்ள அல்லது அந்தஸ்த்தில் உள்ளவராகக் கருதக்கூடிய மதத் தலைவர் ஒருவர் அல்லது வர்த்தமானிப் பிரகடனம் மூலம் பதவி வகிக்கும் பொலிஸ் அலுவலர் ஆகிய ஒருவரினால் அத்தாட்சிப் படுத்தப்படுதல் வேண்டும்.

10. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(அ) உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்குக் காணி ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகளை வழங்கியவுடன் அதனைத் தெரிவித்து பத்திரிகை அறிவித்தல் ஒன்று காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். இந்த அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பாகக் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அதில் உங்களுடைய முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திடம் விசாரிக்குமாறு அறிவிப்பதுடன் நீங்கள் கொழும்புக்கு வெளிப்பிரதேசத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர் எனில், உங்களுடைய குறித்த விபரங்களுடன் தொலைநகல்

இலக்கத்தையும் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தை, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்தல் பொருத்தமாகும். இவ்வாறு விசாரணைகளை மேற்கொள்ளும்போது, தேவைப்படுமெனில் சமர்ப்பிப்பதற்காக உங்கள் வசம் இருக்கின்ற விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பப் பத்திரம் தபாலில் அனுப்பியபோது வழங்கப்பட்ட பதிவுத் தபால் பற்றுச்சீட்டு ஆகியவற்றை தயாராக வைத்திருத்தல் மிகவும் பயனுடையதாக அமையும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள், தங்களுடைய கையொப்பத்தை அத்தாட்சிப் படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் இருந்தால், அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) அந்த வர்த்தமானி பத்திரிகையில் பகுதி I தொகுதி (IIஅ) இல் பிரசுரிக்கப்பட்டுள்ள பரீட்சை ஒழுங்குவிதிகள் அனுசரிக்கப்படுதல் வேண்டும் எனப் பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர்.

(இ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கப்பட்டுள்ள மொழி மூலத்தை பின்னர் மாற்றிக்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

(ஈ) பரீட்சார்த்தி தங்களுடைய ஆள் அடையாளத்தை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிக்கு உறுதி செய்யும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(உ) பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்பட்டிருத்தல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட மாட்டாது.

(ஊ) பரீட்சையை நடாத்துதல் சம்பந்தமாக காணி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும். குறித்த அறிவுறுத்தல்கள் மீறப்பட்டால், காணி ஆணையாளர் நாயகத்தினால் குறித்த நபரின் பரீட்சார்த்தி நிலையை இரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

11. அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகள், காலத்துக்குக் காலம் அரச சேவை சம்பந்தமாக வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் மற்றும் இலங்கை தொழில்நுட்பவியல் சேவைத் தொடர்புடைய சேவைப்பிரமாணம் மற்றும் அவை சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்களிலுள்ள நிபந்தனைகளும் இந்த பதவிக்கு ஏற்புடைத்தனவாகும்.

12. பரீட்சார்த்தி ஒருவர், இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் காணப்பட்டால், குறித்த பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ, எந்தச் சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி நிலையை இரத்துச்செய்வதற்கு இடமுண்டு. பரீட்சார்த்தி ஒருவர் சமர்ப்பித்துள்ள விபரங்கள் எவையாவது தவறானவை எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்திருப்பது காணப்பட்டால், அவ்வாறு இல்லாவிட்டால் ஏதேனும் ஒரு முக்கிய விடயத்தை அவர் தெரிந்துகொண்டே வெளிப்படுத்தாமல் மறைத்திருந்தால், அவர் அரச சேவையிலிருந்து விலக்கப்பட இடமுண்டு.

13. இந்த ஒழுங்குவிதிகளுக்கு உட்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலை, யாதேனும் ஒவ்வாமை அல்லது பொருத்தமற்ற தன்மை காணப்படும் பட்சத்தில், சிங்கள மொழியில் உள்ள அறிவித்தலே சரியானதாகக் கொள்ளுதல் வேண்டும்.

ஆர். பி. ஆர். ராஜபக்ஷ,
காணி ஆணையாளர் நாயகம்.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
இல. 1200/6, மிஹிகத மெதுர,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
2014, நவெம்பர் 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

**இலங்கைத் தொழில்நுட்பவியல்சார் சேவையில் குடியேற்ற அலுவலர் தரம் III ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014**

வர்த்தமானி அறிவித்தலில் 6 ஆம் பந்திக்கு ஏற்ப பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுங்கள்)

(விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.)

1. பெயர் :

1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
உதாரணம் : GUNAWARDHANA M. G. B. S. K.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. சொந்த முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
சொந்த முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
(இந்த முகவரிக்கே அனுமதி அட்டை அனுப்பப்படும்.)

3. பால் நிலை (பெண் - 1, ஆண் - 0) : ☐

(உரிய எழுத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. இனத்தொகுதி :
சிங்களம்-1, தமிழ்-2, இந்திய தமிழர்-3,
முஸ்லிம்-4, ஏனையவர் 5 ☐

(உரிய எழுத்தைக் கூட்டினுள் எழுதுக.)

6.

6.1 விவாகமானவரா ?/விவாகமாகாதவரா ?
விவாகமானவர்-2, விவாகமாகாதவர்-1 ☐

(உரிய எழுத்தைக் கூட்டினுள் எழுதுக.)

6.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

6.3 2014, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. வர்த்தமானி அறிவித்தலில் பந்தி 2 (i) மற்றும் (ii) இற்கு ஏற்ப இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகுதியைப் பெறுவதற்கு நீங்கள் பெற்றுக்கொண்டுள்ள தகைமைகளைக் குறிப்பிடுங்கள் :

(i) கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. த.) பரீட்சை :
பரீட்சை சுட்டெண் :----.
வருடம் :----.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| ----------- | ----------- | ----------- | ----------- |
| ----------- | ----------- | ----------- | ----------- |
| ----------- | ----------- | ----------- | ----------- |
| ----------- | ----------- | ----------- | ----------- |
| ----------- | ----------- | ----------- | ----------- |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :
பரீட்சை சுட்டெண் :----.
வருடம் :----.

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| ----------- | ----------- | ----------- | ----------- |
| ----------- | ----------- | ----------- | ----------- |
| ----------- | ----------- | ----------- | ----------- |

(ii) தொழில்சார் தகைமைகள் :----.

8. பரீட்சைக்குரிய பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கழன்றுவிடாமல் விண்ணப்பப்பத்திரத்தில் இங்கே ஒட்டுங்கள் :

(i) இலக்கம் :----. பணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) திகதி :----. செலுத்திய தொகை (ரூபா) :----.

(பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பின்னர் மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு முக்கியமாகும்.)

9. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும், இந்தப் பரீட்சைக்குரிய பணத்தைச் செலுத்தியமைக்கான ................................ ஆந் திகதிய .............................. ஆம் இலக்க பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளேன் எனவும் வெளிப்படுத்துகிறேன். மேலும் காணி ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்படுவதற்கு இணங்குகின்றேன். இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகைமையற்றவன் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எனது பரீட்சார்த்தி நிலையை இரத்துச்செய்வதற்கான தீர்மானத்திற்கு நான் கட்டுப்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ................................ எனும் பெயருடைய விண்ணப்பதாரர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், இவர் என்னுடைய முன்னிலையில் கையொப்பம் வைத்தார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் முத்திரை.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி (இறப்பர் முத்திரையுடன் உறுதிப்படுத்துங்கள்) :----.
திகதி :----.

11. **விண்ணப்பதாரர் அரச அலுவலர் எனில், உரிய திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................ தற்போது இந்த அமைச்சில்/திணைக்களத்தின் நிரந்தர/தற்காலிக அலுவலர் எனவும், அவர் தன்னுடைய கையொப்பத்தை என்னுடைய முன்னிலையில் வைத்தார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

11-888

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.